THE COUNTRY HERALD.

கிராம தூதன்.

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

மலர்: ௩ | 1941 சனவரி-விக்கிரம, மார்கழி-தை | இதழ்: க

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை.

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமிர்தே என்கண்ணே அரிய வான

பொருளனைத்துந் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே

கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவியாதி

விரிவினையுங் கூட்டிஉயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே யான்சொலும் விண்ணப்பங் கேளே.

அருள் பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே! ஆர் அமிர்தே! என் கண்ணே! அரிய ஆன பொருள் அனைத்தும் தரும் பொருளே! கருணை நீங்கா (த) பூரணமாய் நின்ற ஒன்றே! புனித வாழ்வே கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவி, காலமும் தேசமும் வகுத்து, கருவி ஆதி விரிவினையும் கூட்டி உயிர்த்திரளை ஆட்டும் விழு (மிய) பொருளே! யான் சொ (ல்) லும் விண்ணப்பம் கேளே.

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.

1. பாலுக்குச் சர்க்கரை இல்லையென்
பார்க்கும், பருக்கையற்ற
கூழுக்குப் போடஉப் பில்லையென்
பார்க்கும், குற்றிதைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென்
பார்க்கும், கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லையென்
பார்க்கும் விசனமொன்றே.

கம்பர்.

2. பணப் பெருக்கம் மட்டுமே போற்றத் தக்கதொன்றல்ல; நிலைபெற்ற இன்பப் பேற்றினை விளைவிப்பது மல்ல. உலகப் புகழ் கொண்ட மனிதர் பலர் ஆற்றொணாத் துன்ப மெய்தித் தனிமையில் இறந்தொழிந்திருக்கின்றனர்; அவர்கள் பொருள் மிகப் படைத்தவர்கள்; வாழ்க்கையில் வெற்றியுற்றவர்கள்; இன்பப் பேறடைந்தனரா? இல்லை; இல்லவேயில்லை........

செல்வத்துப் பயனாவது, அதனைச் செவ்விய நெறியறிந்து செலவிடும் வித்தகத் திறனைப் பொறுத்ததாகும். நாம் எத்துணைப் பொருளைத் தொகுத்தோம் என்பது பொருட்டல்ல; அதனையாது செய்தோம் என்பதே கருதற்பாலதாம். இன்பம் விலை மதிக்க முடியாதது; பொன்னைக் கொடுத்தும் வாங்கமுடியாதது; ஆனால், நமக்கும் பிறருக்கும் இன்பப் பேற்றினை அளிக்கவல்ல முறையில் பொருளைச் செலவிடலாகும்.

பாடுபட்டுப் பணத்தைத் தேடுவதற்கும், ஆகூழால் பணத்தைக் கண்டெடுப்பதற்கும் வேற்றுமை மிகவுண்டு. ஒரு தொழிலைச் சிற்றளவில் தொடங்கி வளனுற்றவன் தொழிலில் வளர்ச்சியுடன் தானும் வளர்கின்றான். அவன் மனநிலையும், உளப்பண்புகளும் சிறிது சிறிதாக அகற்சியுறுகின்றன. திடுமெனப் பெரும் பொருளை அடைந்தவனோ, பெரு நிலைக்கேற்றவாறு பண்படாதிருக்கின்றான்; தனது எதிர்பாராத வாழ்க்கை மாறுதலில் திகைப்படைகின்றான்; தவறுபட்ட வழிகளில் பணத்தைச் செலவிடுகின்றான்; தவற்றினால் தீங்கு விளைந்த வழி விழிப்படைகின்றான்.

செல்வமும் வெற்றியும், அவற்றிற்கேற்ற பெற்றி பொறுப்புக்களைத் தருகின்றன. பொறுப்புணர்ந்து வாழ்க்கையை நடத்தும் திறமை யுண்டேல், வாழ்க்கைப் பயனை முற்றும் அடைந்தவராவோம். பொறுப்புணர்ந்த வழி, இன்பப்பேற்றினைத் தரும்; பொறுப்புணரா வழி, துன்பியலை விளைக்கும்.

(தமிழ்ப் பொழில்.)

தமிழவேள் உமாகேசுவரம் பிள்ளை

செந்தமிழ் மணிநாட் டிடையுள்ளீர்! சேர்ந்து முற்படுங்கள்! தமிழ் நாடு தமிழுணர்ச்சி பெற்று விளங்கவேண்டு மானால், அதற்கு உலகோர் மதிக்கும்படியான தொரு வாழ்க்கை வேண்டுமானால், அது இலக்கிய ஒற்றுமையாலும், தமிழ் மொழி வளர்ச்சியாலுந்தான் முடியும்.

(கம்பன் கவிதை) முருகப்பர்,

வறுமைப் பிணி தீராதா?

இப்பத்திரிகையின் நோக்கங்களில் ஒன்ருக, 'வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்.' என்று கண்டிக்கிருேம். திருவள்ளுவரும், உறுபசியின்றி இயல்வதே, நாடென்கிருர். பணமுடையவர்கள் பட்டினியாயிருக்கிருர்களென்ருல், அதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதுமில்லை. நம் நாட்டிலும் பத்துச் சதமானத்திற்கு மேல் பணக்காரரில்லை. மற்றவர்களின் வறுமைப் பிணி தீராதா? நம் நாடும் நாடாகாதா? என்பதே இப்போதைய கேள்வி.

நாம் மிருகங்கள்போல, புல்லை, புளிச்சையை, குழையை, தழையையோ பிற பிராணிகளையோ தின்று காலம் கழிக்கக்கூடியதில்லை. குறைந்த விலை உணவுப் பொருள்களாகத் தின்று காலங்கழிப்பதென்ருலும், ஆளொன்றுக்கு ஐந்து ரூபாவுக்குக் குறையாது வேண்டுமென்று உணவு முறை நிபுணர்கள் சொல்லுகின்றனர். குடும்பமென்ருலும் சராசரி நாலரைப் பேருக்கு மேலிருக்குமென்பர். நம் முன்னேர்கள் பல தலைமுறைகளாகவும் ஒன்ருக வாழ்ந்து வந்திருக்க, நாம் கலியாணமாகவும் பெட்டியைச் சட்டியையெடுத்துக் கொண்டுபோய்த் தனியாக வாழ்வதும் சாதாரணமாகி வருவதால், சில பட்டினங்களில் குடும்பச் சராசரி மூன்று பேருக்குக் குறைவாகவுமிருக்கிறது. மூன்று பேரே குடும்பத்தில் இருக்கிருர்களென்று வைத்துக் கொண்டாலும், மாதம் 15 ரூபா உணவுச் செலவுக்கு மட்டுமே வேண்டும்; அதாவது நாம் பட்டினியின்றியிருக்க நித்தம் ஆணும் பெண்ணுமாக 8 அணு சம்பாத்தியமாவது செய்யவேண்டும்; பெண்பிள்ளை வெளி இடங்களில் வேலை செய்வது கேவலமென்று நினைக்கும் குடும்பங்களில், ஆண்பிள்ளையே நித்தம் 8 அணுவுக்குக் குறையாது சம்பாத்தியம் செய்து தீரவேண்டும், பன்னிரண்டு வயது முதல் 20 வயதிற்குட்பட்டவர்களின் உணவுச் செலவு ஒன்றரையாட் செலவுமாகும். அவர்கள், சாதாரணமாக, சம்பாத்தியம் செய்கிற வர்களாகவும் காணப்படுவதில்லை. நாற்பது வயதுக்குமேல், உணவைச் சுருக்கவேண்டியதுண்டு. அப்படியும் நாம் செய்கிறதில்லை. இந்த நிலைமையில், 8 அணு சம்பாத்தியம் அவசியமென்பது குறைந்த அளவேயாகும்.

நம் நாட்டில், 72 சதமானம் விபசாயத்தையே நேராக நம்பி வாழ்கின்றவர்களாக இருக்கின்றனர். பாக்கி 28 சதமானத்திலும் மாதச் சம்பள வேலைக்காரர்கள் 5 சதமானத்திற்குமேல் இருக்கக்கூடியதில்லை. வேளாண்மைத் தீவு கரிவும், உணவுப் பொருள்களின் விலையேற்றமும், மாதச் சம்பளக்காரரை உடனேயும் பாதிக்கிறதில்லை; மற்றவர்களைப் பாதிக்கும் அளவும் பாதியாது; என்ருலும், அவர்களையும் அவை பாதிக்காதிருப்பதில்லை. மற்றவர்களனைவரையும் அவை நிரம்பவும் பாதிக்கின்றன. சுருங்கச் சொல்லின், விபசாயமே நம் நாட்டின் தாய்த் தொழிலாம். விபசாயம் சரியாக நடைபெற்று வருமென்ருல் மட்டும், மற்றத் தொழில்களும் சரியாக நடைபெற முடியும். விபசாயம் சீர்கேடாக இருந்து வரும் வரை அடிக்கடி வியாபார மந்தங்களும் நம் நாட்டிலேற்பட்டு நாணயச் செலாவணியும் நம்முடைய நாணயமுமே குறைந்து நாடெங்கும் சீரழிவே பெருகி வரும்.

வருடம் பூராவும் விபசாய வேலைகளிருப்பதுமில்லை; விபசாய வேலைக் காலங்களிலும் தொடர்ந்து வேலையிருப்பதுமில்லை. விபசாய

வேலை நாட்களில், உழவு காலம் எங்கும் உழவும், விதைப்புக் காலம் எங்கும் விதைப் பும், நடவு காலம் எங்கும் நடவும், களையெடுப் புக்காலம் எங்கும் களையெடுப்பும், அறுப்படிப் புக் காலம் எங்கும் அறுப்படிப்பாகவும் ஏற்படு வதினால், அந்தந்தக் காலங்களில் சில நாட்கள் வேலைப் பிரியமிருக்கவும் இடமுண்டு. என்ற லும், செழிப்பான காலத்தில் நல்ல கூலி கிடைக்கக் கூடுமேயன்றி, அப்படிக்கில்லாத போது நல்ல கூலியும் கிடைக்கக் கூடியதில்லை. விபசாயக் கூலி அதிகமாவதற்குத் தக்கதாக, விபசாயிகளுக்கு மிச்சம் கம்மியேயாகும். இப்படியாகச் சென்ற பத்து வருடங்களும் அதிக மிச்ச மில்லால், விபசாயிகள் சங்கடப் பட்டே வந்திருக்கின்றனர். இந்த நிலைமை யில், விபசாயிகளைச் சௌகரியமாக வாழச் செய்தல் என்பது வெகு சிரமமான காரியம். அதற்காக, விபசாயிகளும் தீவிரமாக உழைக்க வேண்டும், ஆனால், பிணியாளியின் நிலைமை யிலிருக்கும் விபசாயியோ, தன் உடம்புக்கு இன்னதுதான் செய்கிறதென்று தெரியாத பிணியாளியின் நிலைமையிலிருக்கிறான். அவ னுடைய பிணியைத் தீர்த்துவைக்க வேண்டிய நிலைமையிலிருக்கும் வைத்தியனாகிய அரசாங் கமோ, அதைப் பற்றிய விசாரமேயில்லாமல் ஏகதேசம் 'தாழ்வில்லையே' யென்று விசாரிக் கும் அளவிலேயே திருப்தியடைந்து வரு கிறது. விபசாயிகளுக்கு உதவக் கூடியதாக, அரசாங்கம் செய்துவரும் ஆராய்ச்சிகள் பல வற்றின் பயனையும், விபசாயிகள் இன்னும் அடைந்ததில்லை. அனேகர் அவற்றை இன் னும் தெரிந்து கூட இருக்க வில்லை. கல்வி யறிவு பெருகாதவரை விபசாயிகள் அதை எளிதில் தெரிந்து கொள்ளவும் முடியாது. கல்வி யறிவுடையவர்களிடையேனும் அர சாங்க ஆராய்ச்சிகளின் முடிவுகளும், மற்றும் சிறந்த முறைகளும் பரவ வேண்டுமென்ற ஆசையுடனேயே அத்தகைய ஆராய்ச்சிகளை யும் முறைகளையும் இப்பத்திரிகையில் வெளி யிட்டு வருகிறோம். நம் மாகாண விபசாய இலாகாத் தலைவரும் அவற்றை உடனுக்கு டன் நமக்கு உதவியும் வருகின்றனர்.

விபசாயம் இதுவரை ஒரு பொழுது போக்கான துறைபாக (a mere manner of living) யிருந்து வருகிறதே யன்றி, மிச்சந் தரும் (business) முயற்சியாக வில்லை; அது மிச்சந்தரும் முயற்சியாக வேண்டுமென்றால், விளைவும் அதிகமாக வேண்டும்; விளைபொருள் களுக்கு நல்ல விலையும் கிடைக்க வேண்டும். அவற்றைப் பெறுவதற்கு, நாமும் சலியாது திறமையாக உழைத்துவர வேண்டும்; அர சாங்கமும் நமக்குப் பலவேறு வகையில் உதவி வர வேண்டும். நம் உழைப்பைப் பெருக்கிக் கொள்ளவும், அரசாங்க உதவியைப் பெற்று வரவும் நாம் கிராமங்கள் தோறும் விபசாய சங்கங்களும் அமைத்து, அவற்றின் மூலமாக வும் வேலை செய்துவர வேண்டும். அரசாங்க மும் தாலுகாதோறும் தாசில்தாரைத் தலைவ ராகவும் விபசாய வேலைகளைச் செய்து காட்டும் அதிகாரியை (Agricultural Demonstrator) அமைச்சராகவும் பல விபசாயிகளை அங்கத் தினராகவும் கொண்ட சங்கங்களமைத்து அவற்றின் மூலம் விபசாயிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தும் அரசாங்க ஆராய்ச்சிகளைப் பரப்பியும் வரவேண்டும். அந்தச் சங்கங்கள் இரண்டு மூன்று மாதத்திற் கொரு தடவையேனும் கூடிக் கலந்து பேசிவர வேண்டும். சமாபந்திக்கு முன்னதாக அவசி யம் கூடிப் பைசலுக்கு வரக்கூடிய காரியங்கள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளையும் சொல்லி வரவேண்டும். சமாபந்தி பைசல் முடிந்தபின் இப்பொழுது கூடிவரும் கூட்டத்தி னால் பயனெதுமிருப்பதாகத் தெரியவில்லை; ஆகையால் அப்படிக் கூட்டத்திற்கவசியமு மில்லை.

விபசாயம் மிச்சந்தரும் முயற்சியாக மாறும்வரை, நம் நாட்டின் வறுமைப் பிணி யும் தீராது. விபசாயத்தை மிச்சந்தரும் முயற்சியாகச் செய்வதெப்படி என்பது ஒரு தனிப் பெரும் பொருளாதலால், இதனை இம் மட்டில் நிறுத்தி அதைப்பற்றிப் பின்னர் விரி வாக எழுதுவோம்.

4. வேளாண்மை

குறைந்த மழையிலும் சிறந்த வேளாண்மை.

முன்னுரை

'எவர் ஒரு புல் வளர்ந்த இடத்தில் இரண்டு புல் வளரும்படிக்கும், ஒரு பயிர் வளர்ந்த இடத்தில் இரண்டு பயிர் வளரும்படிக் கும் செய்கிறாரோ, அவர் தேச நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடு படும்தேசியவாதிக ளுக்கும் மேம்பட்டவராவர்' என்றொரு பழ மொழியுண்டு. சீவனத்துக்காகச் சாகுபடி செய் துவரும் கோடிக்கணக்கான மக்கள் நிறைந்த நம் நாட்டில் வசிப்பவர் அனைவரும், அப்படிப் பட்டவருக்கு நன்றியும் செலுத்துவர். விவசாய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகள் அதனைவிட இன்னுமோர் முக்கியமான பிரச்சி னையில் இன்று ஈடுபட்டிருக்கின்றனர். அவர் கள் இதுவரையில் எதுவும் பயிராகாத ஒரு இடத்தில் ஒரு தானியப் பயிராவது வளர்க் கக்கூடிய இரகசியத்தைக் கண்டுபிடிக்க முயற் சித்துக்கொண்டிருக்கின்றனர். எதிர்பார்த்த மழைக்குக் குறைந்து போவதினாலோ அல்லது வேண்டாத காலத்தில் மழை பெய்வதினாலோ பயிர்கள் பூராவும் சேதமடைந்து சனங்களும் மற்றப் பிராணிகளும் துன்பத்திற்குள்ளாகும் காய்ச்சல் பிரதேசங்கள் அநேகம் நம் நாட்டி லிருக்கின்றன. இப்படி மழையையே எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் நிலைமையை நிவர்த் திக்கமுடியாதா? என்றும் அவர்கள் பரிட் சித்துவருகின்றனர்.

இனிப் பஞ்சத்தைப் பற்றிய பயமில்லை. குறைந்த மழையைக்கொண்டே சாகுபடி செய் யலாமென்று சொன்னால், அது சாதாரண சனங்களுக்கு முடியாதென்றே தோன்றும். ஆனால், தற்கால விஞ்ஞான சாத்திரமோ, சாத் தியப்படாதென்று நினைப்பதைக்கூட, சாத்திய மாக்கிவிடுகிறது. பஞ்சாபிலும், சிந்துவிலும் பாலைவனமாக இருந்த கோடிக்கணக்கான ஏக் கர் நிலங்கள் புதுப்பாசனத்தின் மூலம் முத் துக் கொழிக்கும் நிலங்களாக மாறியிருக்கின் றன. பஞ்சாப், இராசபுதனம், மத்திய வார், பம்பாய், சென்னை, நைசாம் இராச்சியம் இவற்றின் சில பாகங்கள் பாசன வசதி செய்ய முடியாததால் அடிக்கடி காய்ந்து கரிந்துபோ கின்றன. இவற்றில் கால்வாய்களின் மூலமோ குழாய்க் கிணறுகளின் மூலமோ நீர்பாய்ச்சி வரக்கூடியதாகவுமில்லை. ஆகையால் இவ் விடங் களில் குறைந்த மழையே பெய்யினும் அதனை நம்பித்தான் இருந்தாகவேண்டும். வேறு பணச் செலவில்லாமல், திருந்திய புன்செய்ச் சாகுபடி முறைகளின்மூலம் விஞ்ஞான சாத்திரம் இத் தகைய இடங்களுக்கு உதவிவருகிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வருடவாரி 20 அங்குலத்துக்குமேல் மழையில்லாமலும், பாசன வசதிகள் நிரம்பவும் குறைவாகவும் உள்ளஇடங்களில், இந்தத்திருந்திய புன்செய்ச் சாகுபடிமுறை முதல் முதல் கண்டு பிடிக்கப் பட்டது.

நிலத்தை ஈரம் காக்கும்படி செய்தலும், நிலத்தினது மண் வயணத்தைத் தெரிந்து கொண்டு அதனை அபிவிருத்தி செய்தலும் பயிர் வளர்ச்சியைக் கவனித்தலும் இம்முறை யின் முக்கியாம்சங்களாகும். இப்பிரதேசங் களில் பெய்கிற மழைத் தண்ணீர் என்ன ஆகிறதென்பதை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். மழைத் தண்ணீர் வழிந்தோடும் போது, நிலத்தின்மேல் மண்ணையும் கரைத் துக்கொண்டு போகிறது. இப்படி மண் கரைந்து போவதால் நிலத்தின் சத்துக் குறைந்து நல்ல நிலங்கள்கூட நாளடைவில் பாலைவனப் பிரதேசமாக மாறி விடும்.

சோளாப்பூரில் வருடவாரி 50 முதல் 150 டன் மேல் மண் அடித்துக்கொண்டு போவதாகத் தெரிகிறது. வழிந்தோடாமல் தங்கும் சலத்தில் $2\frac{1}{2}$ சதமானம் ஆவியாகப்போய் விடுகிறது. அதிக ஆழமில்லாத 18 அங்குல மண்ணேயிருக்கும் நிலங்களில் விழும் மழைத் தண்ணீர் அடியிலே கூடி வடிந்து போகிறது. இதில் சேதம் தரைக்கு மேலாக வடிந்து போவதைக் காட்டிலும் அதிகமாகும். அதனால் மற்றப் பிரதேசங்களில், தட்சண பீட பூமியிலுள்ள களிமண் நிலங்களின் ஈரச் சத்து பயிர்களுக்கு உதவுவதுபோல, உதவ முடியாதும் போகும். இப்படியாகப் பலவிதமாகவும் மழைத்தண்ணீர் சேதமாகி விடுவதால், சாதாரணமாக மழையின் முழுப்பயனையும் பயிர்கள் அடைவதில்லை.

எவரும் சுலபமாக அனுட்டிக்கக் கூடிய முறை

இந்தச் சேதங்களைத் தடுப்பதற்குப் பல முறைகள் அனுட்டிக்கப்படுகின்றன. மேல் தரையில் வழிந்தோடுவதைத் தடுப்பதற்கு, அங்கங்கே கரைகள் போடப்படுகின்றன; நிலங்களைச் சின்னஞ்சிறுகுண்டுகளாகப் பிரிக்கப் படுகின்றன. மேல் தண்ணீர் வழிந்தோடிவிடாமலும் மேல் மண் அடித்துக்கொண்டு போகப் படாமலும் தடுக்க, ஒரு கருவியும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருவி மேல் தளத்தில் மழைத் தண்ணீரை இருத்திக் கொள்ளக் கூடிய சௌகரியமும் செய்து தருகிறது. இதனால், பெய்கிற மழைத்தண்ணீர் நிலத்திலேயே வெகுவாகத் தங்கிவிடுகிறது.

பாசனவசதி யில்லாத புன்செய்ப் பிரதேசங்களில் பல களியாகவே இருக்கின்றன. அவற்றில் பயிர்கள் விரைவாக வேரூன்றி நிலைக்க அதிகத் தண்ணீர் வேண்டியிருக்கிறது. காய்ச்சல் அதிகமானால், மண் இறுகி வெடிப்பு உண்டாகி அடிமண் காய்வதற்கும் இடமாகிறது. இப்படி யிடங்களில் மேல் மண்ணை அடிக்கடி கொத்தியும் உழுதும் புழுதியாக்கி வைத்திருந்தால், மழைத்தண்ணீர் மண்ணிலேயே ஊறி, இன்னும் அதிகப் பாகத்தை நனைத்துப் பாவிக்கொள்ளும். மேலும் விழுந்த தண்ணீரை மண்ணானது கிரகித்து வைத்திருந்து, பின் அதில் பயிரிடும் பயிருக்குக் கொடுக்கும். பஞ்சாபின் நிலம் களியல்ல; வண்டல் பாங்கானது. அது தண்ணீரை வெகு சீக்கிரத்தில் இழுத்துக்கொள்ளக் கூடியது. ஒரு அங்குல மழை பெய்தால் அது ஆறங்குல ஆழம் வரையில் கீழே யிறங்கிவிடும். களிமண்ணென்றால், ஒன்றல்லது இரண்டங்குலம் தான் இறங்கும். பயிர்களின் வேர்களும் அவ்வளவு ஆழம்தான் போகும். நிலத்தின் ஈரச் சத்து நான்கு அல்லது ஐந்து சதமானம் இரண்டு சதமானமாகக் குறைந்து போனபோதிலும், அந்த ஈரச் சத்து பயிருக்குச் சுலபமாகக் கிடைக்கக் கூடுமாகையால், இப்படிக் குறைந்த நிலைமையிலும் பயிர்கள் நிலைத்துக்கொள்ளுகின்றன. நிலம் ஏற்றத் தாழ்வில்லாமல் ஒரே மட்டமாக இருந்தால், மழைத் தண்ணீர் வழிந்தோடி மேல் மண்ணை அடித்துக் கொண்டுபோய் விடுமென்று பயப்பட வேண்டியதில்லை. இப்படியாக, பஞ்சாபில் நிலத்தின் ஈரச் சத்தைக் காப்பாற்றுவதற்கு அதிகச் சிரமம் வேண்டியதில்லை.

ஆராய்ச்சி செய்யவேண்டிய மூன்றாவது காரியம், காய்ச்சல் பிரதேசங்களில் என்ன பயிர் சாகுபடி செய்யலா மென்பதாகும். பஞ்சாபில் கோதுமை, துவரை, காராமணி வகைப் பயிர்களைக் கொண்டு பரிட்சைகள் நடத்தப்பட்டன. பம்பாயில் சோளம் பரிட்சைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒரு குறிப்பிட்ட கனமுள்ள காய்ந்த சோளம் விளைவதற்கு அதைப் போல் 400 முதல் 500 மடங்கு கனமுள்ள தண்ணீர் தேவையாயிருக்கிறதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, ஒரு ஏக்கரிலிருந்து ஒரு டன் சோளம் அறுவடை செய்வதற்கு ஐந்து அங்குலம் மழை வேண்டும். நிலத்திற்கு நன்றாக உரம் போட்டிருந்தால் நான்கு அங்குலத்

தண்ணீரிருந்தாலும் போதுமானது. இந்தக் கவனிப்பின் மூலம் விதை விதைப்பதில் பயிருக்குப் பயிர் சரியான இடைவெளி எவ்வளவு இருக்க வேண்டுமென்பதும் ஒரு ஏக்கருக்கு ஐந்து வண்டி உரம் போட வேண்டுமென்பதும் தெரிய வந்தன. மேலும், பயிருக்குப் பயிருள்ள இடைவெளியை, மாடுகட்டி ஓட்டும் களைகல்லும் கருவியால், அடிக்கடி கிளரிவிட்டு, கிடைக்கும் ஈரச் சத்து சேதமாகாதும் காக்கப்பட்டது.

பம்பாய் முறை

1. அதிக ஆழமானதும் நடுத்தர ஆழமுள்ளதுமான நிலங்களை டர்ன் ரெஸ்டு (turn wrest) என்ற கலப்பையைக் கொண்டு மூன்று வருடத்திற் கொரு முறை உழுவது.

2. நிலங்களுக்குக் கரை போட்டு மேடு பள்ளத்திற்குத் தக்கபடி படிப்படியான சிறிய நிலங்களாகப் பிரித்து மழைத் தண்ணீர் வழிந்தோடிவிடாதபடி தாமாகவே தடுக்கச் செய்வது.

3. ஏக்கருக்கு ஐந்து வண்டி வீதம் சாணி எருப் போடுவது அல்லது ஒரு சணப்புப் பயிர் வளர்த்து நிலத்திற்குள் அமுக்கி விடுவது.

4. விதைப்புக்கு முன் பருவ மாதங்களில் நாலைந்து தடவை நிலத்தைக் கிளறிக் கொடுப்பது. (இஃது ஈரச் சத்தைச் சேமித்து வைப்பதோடு, கோரை முதலிய களைகளையும் அழித்து விடுகிறது.)

5. குறைந்த அளவு விதைகளைக் கொண்டு வரிசைக்கு வரிசை 18 அங்குல இடைவெளி யுள்ளபடி விதைப்பது.

6. முளைத்தபின் மாடுகட்டி ஓட்டும் களை வெட்டும் கருவி கொண்டு வரிசைகளுக் கிடையிலுள்ள நிலத்தை நாலைந்து தடவை கிளறிவிடுவது (இதனாலும் ஈரச் சத்து சேமிக்கப்பட்டுக் களைகள் அழிந்து போகின்றன.)

இரட்டிப்பு விளைவு.

மேலே சொல்லிய முறைகளை யனுட்டிக்க, அதிகப் பணச் செலவும் ஆவதில்லை; ஆனால், அதிக வேலை யுண்டு. செய்யும் அதிக வேலைக்குக் கிடைக்கும் வெகுமதி ஆச்சரியமாயிருக்கும். பிசப்பூர் ஜில்லாவில் 1936-37ம் வருடம் மழை நிரம்பவும் குறைவு. பரீட்சார்த்தப் பண்ணையில் அவ்வருடத்தில் ஏக்கருக்கு 490 இராத்தல் சோளமும் 710 இராத்தல் சோளத்தட்டையும் கிடைத்தன. நாட்டு முறைப்படி சாகுபடி செய்ததில், ஏக்கருக்கு 205 இராத்தல் சோளமும் 420 இராத்தல் சோளத்தட்டையுமே கிடைத்தன.

மழைக் குறைவான வருடங்களிலும் மகசூல் கிடைக்கிற தென்பதொரு பக்கமிருக்க, பம்பாயில் மட்டும் 60 இலட்சம் ஏக்கர்களில் அதிக விளைவு கிடைக்கிறதென்றால், பஞ்சம் வரக்கூடிய ஜில்லாக்களுக்கு அதன் மூலம் நன்மை எவ்வளவென்று சொல்லத் தேவையில்லை. சென்னையில் 67 இலட்சம் ஏக்கர்களும் ஐதராபாத்தில் 15 இலட்சம் ஏக்கர்களும் சோளப் பயிர் சாகுபடியாகிறது. பஞ்சாபில் காய்ச்சலால் பாதிக்கப்படும் பரப்பும் 50 இலட்சம் ஏக்கர்களுக்கு மேலாகும். புதிய முறைப்படி சாகுபடி செய்யக்கூடியதும் வரகு சாகுபடி செய்யப்படுவதுமாகச் சுமார் 200 இலட்சம் ஏக்கர்கள் நம் நாட்டில் பஞ்சம் வரக்கூடிய பிரதேசங்களிருக்கின்றன. திருந்திய முறையின் மூலம் கிடைக்கும் இலாபம் ஏக்கருக்கு ஒரு ரூபாதானென்று வைத்துக் கொண்டாலும் கூட மொத்தத்தில் நாட்டின் செல்வத்தில் 200 இலட்ச ரூபாய் அதிகமாகி விடும்.

நம் நாட்டில் பஞ்சப் பிரதேசங்களுக்கு இந்தச் சாகுபடி முறை மிக்க சௌகரியமே செய்கிறது. இந்த முறைப் பரீட்சைகள் இன்னும் முடிவு பெறவில்லையென்றாலும், இம்முறையின் சித்திக்கு மூலாதாரமான பண்புகள் தீர்மானமாகிவிட்டன. ஆகையால், இனி மழை சரிவர இல்லையே என்று ஏக்கங்கொள்ளாமல், விஞ்ஞான ஆராய்ச்சியால் கிடைத்திருக்கும் இம்முறையைக் கையாண்டு பலனடைவது நம் விவசாயிகளையே பொறுத்திருக்கிறது.

Indian Farming.

5. கூட்டுறவு :

சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை.

IV

திரு நிக்கல்சன் அறிக்கை.

The Report on Land & Agricultural Bankes.

விபசாயிகளின் கேவலமான நிலைமைக்குக் காரணங்கள் பல. நிலங்கள் சத்துக்குறைந்து வருவதும், மழை பெய்தும், பெய்யாதும் அவர்களைச் சீரழிப்பதும், விளைந்த மகசூலுக்கும் விலையில்லாதுபோவதும், கடன்கள் வளர்வதுமே காரணங்களெனச்சொல்லுவதற்கில்லை. அவர்கள் கடனாளிகள் ஆவதற்கு, கொடுக்கல் வாங்கல் செய்வோரும் காரணமெனச் சொல்லுவதற்கில்லை. அளவுக்கு மிஞ்சிய கடன் பிசகலாமேயன்றி, கடன் வாங்குவதே பிசகென்றும் சொல்லிவிட முடியாது. இந்த நிலைமையில், கொடுக்கல், வாங்கல் செய்வோரை நிர்ப்பந்திப்பதினாலும், விபசாயிகளுடைய நிலைமை திருந்திவிடாது. அதனால், அவர்களுக்கு இப்பொழுது கடன் கிடைத்துவரும் மூலமும் குறைந்து, அதனாலும் அவர்களுடைய சங்கடங்கள் அதிகமாகக் கூடுமேயன்றிக் குறையக்கூடியதில்லை. என்றாலும், வட்டிதாரணை அதிகமென்றே சொல்லவேண்டும். எந்த நிலங்களின் வரும்படியிலிருந்து திரும்பக் கொடுத்துவிடலாமென்ற எண்ணத்துடன் கடன் வாங்கப்படுகிறதோ, அந்த நிலங்களின் மிச்சம், வாங்கிய கடனின் வட்டிக்குக்கூடப் போதியதாக இல்லாதிருக்கும் வரை, வாங்கிய கடன் தீராது வளர்வதில் ஆச்சரியப்படுவதற் கொன்றுமில்லை. அப்படிக் கடன்களினால் அவர்கள் தங்களுடைய நிலங்களை இழக்கவே நேரும். இப்படியாக, தாமாக, புத்தியாக, பிழைக்கத் தெரியாதவர்களை, முடியாதவர்களை, சட்ட பூர்வமாகப் பிழைக்கச் செய்திடவும் முடியாது.

விபசாயிகளைத் தான தருமங்களினால் செழிக்கச் செய்வதும் சாத்தியமில்லாத காரியம்; அவற்றைப் பெறுவோரையும், அவை இழிவுபடுத்தும். அதிக வட்டிக்கடனை குறைந்த வட்டிக்கடனாக மாற்றியும் திருப்பிச் செலுத்தக்கூடிய அளவிற்கே கடனுதவியும் ஊக்கப்படுத்துவதினால், அவர்களும் தங்கள் மரியாதையை இழந்து விடாமல் புத்துயிர் பெற்று விருத்தியாக முடியும்.

விபசாயிகள் தங்கள் நிலங்களின் அபிவிருத்திக்காகக் கடன் வாங்குகிறார்களென்றால், அதனால் அத்தனை பாதகமிராது. அதனால் அவர்களுடைய வரவும் அதிகமாகக்கூடும்; வாங்கிய கடன் தீருவதற்கும் அஃதொரு வழியாகும். ஊர் வழக்கம், சாதிக்கட்டு விடாமல் செலவழிக்க வேண்டுமென்றும், மற்றவர்களைப் போலவே தானும் செலவழித்துவிட வேண்டுமென்றும், பைத்தியக்காரத்தனமாகவும், வீம்பாகவும், வீணாகவும் கடன் வாங்கியும் செலவழிக்கிறபோது தான், அது அவர்களைச் சங்கடத்திற்குள்ளாக்குகிறது. சமுசாரிகளெவருக்குமே-அதுவும் சிறு சமுசாரிகளுக்கு, மகசூல் அறுப்படிப்பிற்கு முன் தீர்வைக் கட்டாயமும் வரலாம்; கன்று காலிகள் சாகலாம்; இப்படியாக, கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தமும் நேரலாம்; இப்படியாக, ஏகதேசமே நேரக்கூடும். அதைக் குற்றம் சொல்வதற்கும் இடமிராது. கடன் வாங்குவதே ஒரு வழக்கமாக, அதிக வட்டிக்கும் அதிகப்படியாகவும் கடன் வாங்குகிறவர்களுடைய நிலைமையைச்

சௌகரியமான வட்டிக்குக் கடன் கொடுப்பதால் மட்டும்- அவர்களுடைய போக்கையே திருத்தாமலும், கடன் வாங்குவதை மட்டுப்படுத்தாமலும்- திருத்திவிட முடியாது.

இப்படியாக, விபசாயிகளுடைய போக்கைத் திருத்துவதும் எளிதான காரியமல்ல. அவர்களுடைய பழக்க வழக்கங்களில் கேடாக இருப்பனவற்றை, அவர்கள் கேடென உணர வேண்டும். அவற்றைத் தவிர்க்க, அவர்கள் முயற்சிக்கவும் வேண்டும். அவற்றிற்கு அவசியமான அறிவு பிறக்க, அவர்களுடைய கல்வியறிவும் சிறக்கவேண்டும். அவர்கள் எழுதப்படிக்கவும் தெரியவேண்டும். இப்படியான நிலைமையில், அவர்களுக்கு நல்ல விலை கிடைக்க விற்பனைச் சௌகரியங்கள் செய்தும், சௌகரியமான வட்டிக்கும் வேண்டும் அளவிற்கே கடன் கிடைக்கக்கூடியதாகச் செய்தும், அப்படிக் கடனையும் அவர்களுக்கு அவசியமான காலத்தில் தாமதமன்னியிலும், இலகுவாகவும் கிடைக்கச் செய்தும், அதனைப் பயன் தரும் வகைகளுக்கே செலவழிக்கத் தூண்டியும், இப்படிக் கட்டுப்பாடாக அவர்களை நல்ல வழிகளில் தொடர்ந்து பழக்கி வந்தால் மட்டும்- அவர்கள் முன்யோசனையாக வாழவும் தெரிவார்கள்; தாங்களாகவே செட்டாகவும் விருத்தியாகவும் வாழப்பழகுவார்கள்; அவர்கள் முன்யோசனையாக யோசித்தும் மிச்சம் வைக்கத் திட்டம் போட்டும் அதன்படி மிச்சம் வைப்பதற்கும் தக்கதாகவுமே அவர்களுக்குக் கடன் கொடுத்து வருவதென்றிருந்தால், அவர்கள் தங்களுக்குத் தாங்களே யுதவவும், ஒருவருக்கொருவருதவிக் கொள்ளவும் பழகிவிடுவார்கள்; இந்த நற்பழக்கம் வேறு காரியங்களுக்கும் உதவும். அவர்களும் சகல வழிகளிலும் திருந்தியவர்களாவார்கள். (திரு. நிக்கல்சனுடைய கருத்துக்களை ஒருவாறாகத் தமிழில் சொல்லியிருக்கிறோமேயன்றி, அவற்றின் அழகும் தெளிவும் குறையாது சொல்லியிருப்பதாக நினைக்கிறதற்கில்லை. ஆகையால், அவருடைய அங்கில வாசகத்தைக் கீழே குறிக்கிறோம். It is not merely cheap and facile credit that is required; it is a credit which must indeed be cheap, and facile in that it shall be ever at hand, but, it must be credit which shall only be so obtainable that the act and effort of obtaining it shall educate discipline and guide the borrower; it should be granted only to those who have learned to think, to plan, to save; the method of provinding it must teach the lessons of self and mutual help, and suggest the extension of those lessons to matters outside of more credit; it must be safe not merely in eliminating the dangers of usury, but in being controlled, heedful, and prodective.

இப்படியாக விபசாயிகளின் வரவு அதிகப்படவேண்டும். அவர்கள் முன் யோசனையாக மிச்சம் வைத்து வரவேண்டும். அவர்களுடைய மிச்சமே அவர்களுக்குச் சமயத்துக் குதவக்கூடியதாகப் பெருகி வரவேண்டும். கடன்களெதற்காகத்தான் வாங்கலாம்; எவ்வளவுக்குத்தான் வாங்கலாம்; அவற்றை எவ்வகையாகத்தான் உபயோகிக்கலாமென்பதையெல்லாம் அவர்கள் அனுபவத்திலேயே அறியவேண்டும். இப்படியாக, அவர்களுடைய வரவை அதிகப்படுத்துவதற்குதவவும், மிச்சத்தைச் சேகரித்து வைப்பதற்குதவவும் தாபனங்களும் வேண்டும்.

வியாபார பாங்குகள் குறிப்பிட்ட குறுகிய காலங்களுக்கே கடன் கொடுப்பதிலும், கூடியவரை திட்டமான வரவு தரத்தக்க வியாபாரங்களுக்கும் தொழில்களுக்கும் கடன் கொடுக்கக்கூடுமேயன்றி, மழையாலும் மற்றும் காரணங்களாலும் எதிர் பாராத விதமாகவும் குறைவுபடக்கூடிய விபசாயத்திற்குக் கடன் கொடுக்கக்கூடியதில்லை. சமீபத்திலாரம்

பித்த நிதிகளால் அனேகம் படிப்பும் திறமையும் யோக்கியப்பொறுப்பும் அற்றவர்களும்கணக்கு வழக்குக் கொஞ்சங்கூடத் தெரியாதவர்களும் பொது சனங்களை வஞ்சிப்பதற்கென்றே ஆரம்பித்தவைகளாக, பேராசை பிறக்கும்படியாகப் பெரும் புளுகுகள் புளுகி, பொது சனங்களின் பணத்தைப் பெற்று, கவனமின்றியும் மோசமாகவும் கடன் கொடுத்து, ஒருவருக்கு முதவாது முடிந்துபோயின. ஆகையால், நிதிகள் உதவக்கூடுமென்று நினைப்பதற்குமில்லை. கூட்டுறவுச் சங்கமொன்றே, பலர் கூடிச் சேருவதின் பயனையும், அதிகாரத்தையும் அதன் அங்கத்தினர்களுக்குப் புகட்டியும், அவர்களைக் கொடுக்கல் வாங்கல் முறையாகச் செய்யப் பழக்கியும், அவர்களில் முன் யோசனை யில்லாது ஊதாரித்தனமாகச் செலவு செய்து வந்தவர்களையும் செட்டாக முன் யோசனையுடன் வாழச் செய்தும், சோம்பேறிகளையும் வெறியரையும் நிதானமுடையவர்களாகவும் சுறுசுறுப்புள்ளவர்களாகவுமாக்கியும், விபசாயிகளை யெல்லாம் திருத்தக்கூடியது; அதில், ஏழைகளும் தளர்ச்சியடைந்தவர்களும், பணக்காரர்கள் திறமைசாலிகள் நிதானத்தால் சிறந்தவர்கள் முன் யோசனையாய் வாழ்பவர்கள் ஆகிய இவர்களோடு சமமாகப் பழகியும் ஒருவரையொருவர் கண்டும், ஒருவருக்கொருவருதவியும் ஆரவாரமின்றித் திருந்தி வரக்கூடும்.

ஐரோப்பாவிலிருப்பவர்கள் போன்று,இங்கும் ஒவ்வொரு கிராமத்திலும் புத்திசாலித்தனத்துடன் கூட்டுறவியக்கத்தையும் தாபனங்களையும் நடத்தி வரக்கூடியவர்களாக நல்ல பதவியிலிருப்பவர்கள் பலரிருக்கின்றனர். இந்தப் புதுக் கருத்துக்களை ஆவேசத்துடன் பரவச்செய்யவும், தாம் எழுதுவதும் பேசுவதுமாக—அவையும் வேண்டியதுதான்—நின்றிடாமல் சங்கங்களை அமைத்து நடத்தி வரவுங் கூடியவர்களைக் கண்டுபிடித்தாகவேண்டும். பெரிய திட்டங்களும் தாபனங்களும், அறிக்கைகள், அரசாங்க உத்தரவுகள், சுற்றுத்தரவுகளும், விசேட உரிமைகளும் வெற்றியையளித்திடமாட்டா. சாதாரணக் கருத்துக்களையும், சிறந்த நோக்கங்களையும், எளிய முறையிலேனும் நடத்தி அவற்றினிடையே வரும் சங்கடங்களையும் வரவர நிவர்த்தி செய்து நாட்டிற்குகந்த திட்டத்தை நடத்தி முடிப்பதினாலேயே வெற்றிபெற முடியும். அப்படித் திட்டத்தையும் சாதாரண சனங்களுடனும் அக்கறையுடன் கலந்து அவர்களுடைய ஊக்கத்தையும் வளர்த்து உழைப்பை உருவாக்கிப் பெருக்கிப் பலரும் பலவருடங்கள் தொடர்ந்து வேலை செய்து வருவதின் மூலமாகவே காரியமான பலனையடைய முடியும். அப்படிச் சலியாது காரியமாக வேலை செய்வதற்கு வருபவர்களும், நல்லொழுக்கத்திலும் ஒருவருக்கொருவருதவுவதிலும் கூட்டுறவு சுய உதவி முதலியவற்றிலும் சிறந்து விளங்குகிற உழைப்பாளர்களாக இருக்கவேண்டும். இந்த அறிக்கையின் சாரமே அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதுதான் (Find Raiffesein') என்று இரண்டு வார்த்தைகளில் சொல்லிவிடலாம்.

(தொடரும்)

6. கல்வி:

கல்வியும் கிராமாபிவிருத்தியும்

Education and Village Improvement

I. W. Moomaw M. Sc, Anklesvar

(சாரம் I)

முன்னுரை.

கிராமங்களின் ஆதரவில் வாழ்ந்து வரும் பட்டினங்களில் அடிக்கடி வேலை நிறுத்தங்களும் குழப்பங்களும் நிகழக் காண்கிறோம்; அவை கிராமங்களில் நிகழக் காண்பதில்லை; என்றாலும், கிராமங்களின் வாழ்வும் திருப்திகரமெனச் சொல்லுவதற்கில்லை. கிராமங்களில் சில சமுசாரிகளே போதிய வரவுள்ளவர்களாக இருக்கின்றனர். பலருக்குப் போதிய வரவில்லை; எவருக்கும் நிலத்தின் பரப்புக்குத் தக்க வரவேயில்லை. மழையால் பனியால் கேடு நேரிடுமாயின், அவர்களுடைய நிலைமை பின்னும் அதிக மோசமாகி விடக்கூடும்.

படிப்பில்லாத சமுசாரிகளும் புத்திசாலித்தனத்தில் குறைவாக இல்லை. அவர்களுடைய கலப்பையைப் பயன்படுத்தியறியாதவர்கள், அவர்களைக் கேலிசெய்யலாம். ஆனால், சுருங்கிய செலவில், அவ்வளவு பயன்தரக்கூடியதான கலப்பை வேறு எந்நாட்டிலும் கிடையாது. தாங்கள் கையாளும் முறைகளுக்கு அவர்கள் காரணமின்னதெனச் சொல்லத் தெரியாதிருக்கலாம்; அதனால், அவர்கள் காரியத்திற்கு இதுவரை குறைவு நேர்ந்ததாகவுமில்லை. நேருக்குநேராகத் திருந்திய முறைகளால் இலாபமிருக்கிறதாகக் கண்டாலன்றி, அவற்றைச் சாதாரணமாக அவர்கள் கையாளுவதில்லை. அவர்கள் முறையாகவும் விருத்தியாகவும் விபசாயம் செய்வார்களென்றால், திட்டமாகவும் செழிப்பாகவும் வாழக்கூடும்.

இப்போதைய கிராமக் கல்வி விபசாய விருத்திக் கேற்ற கல்வியாகவும், விபசாயிகளின் சுகவாழ்விற் கேற்ற கல்வியாகவும் இருக்க வில்லை. அவர்களுடைய விருத்திக்கான கல்வியாகக் கிராமக் கல்வி அமையுமென்றால், குழந்தைகளின் மூலம் பெற்றோர்களும் தெரிந்து விபசாயத்தை விருத்தியாகச் செய்து வரக்கூடும். (குழந்தைகளின் மூலம் பெற்றோர்கள் தெரிந்து திருந்திய முறைகளை விரைவில் கையாளக்கூடுமென்று சொல்லுவது அத்தனை சரியாகத் தெரியவில்லை. குழந்தைகளின் பள்ளியாசிரியர்களே சமுகத் தொண்டர்களாகவும் இருந்து முதியோர் கல்வியிலும் ஈடுபட்டு முதியோருக்கு எழுதப் படிக்கக் கற்பிப்பதோடு, திருந்திய முறைகளையும் குழைத்துப் புகட்டுவார்களென்றால் மட்டும், திருந்திய முறைகளை அவர்கள் விரைவாகவும் கையாளக்கூடும். மற்றப்படி குழந்தைகளின் கல்வி குழந்தைகளுக்கும், அவர்களுக்கு வயது வந்த பிறகே கையாளுவதற்குதவும். சாதாரண இரவுப் பாடசாலைகளுக்கு முதியோர் படிக்க விரும்பிப் போகக்கூடியதுமில்லை; போனாலும், அவர்கள் அத்தனையாக அவற்றால் பயனடையக்கூடியதுமில்லை. ப-ர்)

நிலத்தைப் பேணி வாழவேண்டும். (சமுசாரிக்குப் போதிய நிலமும் தண்ணீரும் இருந்தால் போதும்; நல்ல விளைவைப் பெறக்கூடுமென்பார்கள். திருந்திய முறைப்படி பயிரிடுவார்களென்றால், மற்றப்படி அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதற்கும் அதிகமே விளையக்கூடும். ப-ர்.) பள்ளிக் கல்வியுடன் நல்ல உரம் சேர்க்கவும், நிலத்திற்கும் பயிருக்கும் ஏற்ற உரமிடவும், நல்ல விதைகள்

பொறுக்கி விதைக்கவும், (குறைந்த தண்ணீரிலும் நிரம்ப மகசூல் விளைவிக்கவும் ப-ர்.) கற்பித்து வரலாம். நிலத்தின் சத்துக் குறையாதபடிக்கும் நிலத்தை அறுத்துப் பிடுங்கி விடாதபடிக்கும் பாதுகாக்கவும் கற்பிக்கலாம்.

கிராமவாசிகளின் மனதும் போக்கும் மாறினால்தான், கிராமாபிவிருத்தியும் அமையக்கூடும். வெறும் யோசனைகளும் பிரசங்கங்களும் அவர்களைத் திருத்திவிட மாட்டா. கிராமங்களிற் காண்பதெல்லாம் கேவலமாக இருக்கிறதென்று பேசுவதும், அவர்களுக்குப் பிடிக்கக்கூடியதில்லை. கிராமங்களில் நல்லதில்லாமலுமில்லை. அவற்றையும் சிலாகித்து, சில காரியமான திருத்தங்கள் சொன்னால், ஒரு வேளை அவற்றை ஏற்கக் கூடும்.

கிராமவாசிகள் பெருந்தன்மைக்காரர்கள்; அவர்கள் தாங்கள் பட்டினியாக இருந்தும் வந்தவர்களுக்கு உபசாரம் செய்வதில், தவறுவதில்லை. அவர்கள் கடினமான உழைப்பாளிகள்; அளத்தற்கரிய பொறுமைசாலிகள்; தங்கள் நிலங்கள் சில வருடங்கள் தொடர்ந்தும் விளையாது போனாலும், அப்பவும் தாங்கள் தளராது சோராது முயற்சியைக் கைவிடாது, பின்னும் உழைத்துவருவார்கள். அவர்கள் ஏழையாக இருக்கலாம்; அவர்கள் குடியிருப்புக்கள் போதியதாக இல்லாதிருக்கலாம்; கிராமங்களில், கட்சிகளுமிருக்கலாம். என்றாலும், அவர்களுடைய குடும்ப வாஞ்சைக்களவில்லை. அவர்களைச் சரியாகத் தெரிந்துகொள்ளாமல், அவர்களிடத்தில் அனுதாபமில்லாமல், அவர்களைக் குறைகூறுவது அவர்களைத் திருத்துவதற்கான நல்லெண்ணத்தோடு சொல்லுவதாக ஏற்படாது.

கிராம வாசிகள் எல்லாம் விதியின்படி நடக்கும் என்பதில் பெரும் நம்பிக்கை யுள்ளவர்கள்; பரம்பரை வழக்கங்களையும் முறைகளையும் விடாப்பிடியாக அனுசரித்து வருபவர்கள். (அவர்கள், அவர்களுடைய பெரு முயற்சிகளும் பல தடவை பலிதப் படாது போனதைத் தங்களனுபவத்திலும்கண்டிருப்பவர்கள்; அவர்களுடைய சிறு முயற்சிகளும் பெருவாரியாகப் பலிதப் படுவதையும் கண்டிருப்பவர்கள். இப்படியாக அவர்களுடைய நம்பிக்கைக்கும் காரணமில்லாமலில்லை. ப-ர்.) அவர்களை நம்முடைய அன்பினாலும் உண்மையினாலும் நம் கருத்திற்கிணங்கி வேலை செய்துவரத் தூண்டவுங் கூடும்; நம்முடைய வாயாடித் தனத்தால், அவர்களுடைய வெறுப்பையே நாம் பெற முடியும்.

அவர்களுடைய நிலங்கள் சத்துக் குறைந்திருக்கலாம்; அவர்களுடைய மகசூல் பூச்சிகளால் சேதமடையலாம்; அவர்களுடைய நிலங்கள் அறுத்துப் பிடுங்கப் படலாம். என்றாலும் பல நூற்றாண்டுகளாக, இயற்கையையே அவர்கள் நம்பி வந்திருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கைக்கு இணக்கமாகவே, திருத்தங்களும் செய்யப்பட வேண்டும்.

கிராம வாசிகள் சமீப காலமாகப் பட்டினப்பொழுது போக்குகளிலும் வேடிக்கைகளிலும் கலந்து வருகிறார்கள். கிராமங்களிலேயே விளையாட்டுகளும் நடைபெறுமென்றால், அவர்கள் அவ்வளவிலும் திருப்தி அடைவார்கள்.

(தொடரும்)

---

* Oxford University Press.
PP 160 Rs 2.

கிராமாபிவிருத்தி வேலைகளில் அக்கறை கொண்டுள்ள ஆங்கிலந் தெரிந்த நண்பர்கள் மூலநூலை வாசித்தலினால் பெரிதும் பயனடைவர்.

7. அ. சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை.

காது.

காதை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். புறக்காது, நடுக்காது, உட்காது. முதலாவது புறக்காது. அதுதான் நாம் வெளியிற் பார்ப்பது. அது செவிப் பறையில் (Drum) போய் முடிகிறது. செவிப் பறைக்கு அப்பால் ஒரு சிறிய பெட்டியைப் போன்ற ஒரு அமைப்பு இருக்கிறது. இதுதான் நடுக்காது. இங்கேதான் சுத்தி, அடைகல், அங்கபடி என்ற மூன்று சிறிய எலும்புகளும் இருக்கின்றன. நடுக்காதிலிருந்து மூக்குக்குப் பின்னே உள்ள வளைக்கு ஒரு குழாய் போகிறது. இந்தக் குழாய்க்குப் பறைக் குழாய் (Eustachian tube) என்று பெயர். இது ஒரு முக்கியமான குழாய்; ஏனெனில், சிறு வயதிலே இதில் ஏற்படும் கோளாறுகள் தான் முற்றிச் செவிட்டு நோயாக முடிவது.

உட்காது, நடுக்காதிற்கு அப்பால், மூளையின் அடிப்பாகத்தில் இருக்கிறது. இது மிக மிகச் சிக்கலான ஒரு அமைப்பு. இதிலே திரவங்களும் எலும்பு முனைகளும் நரம்பு முனைகளும் இருக்கின்றன.

காதினுடைய உள் அமைப்பு மிகவும் நுட்பமானது; ஆகையால், அதற்கு ஒரு சேதமும் ஏற்படக்கூடாது. அதை மிகவும் பத்திரமாகக் காத்துக்கொள்ள வேண்டும்.

குறும்பியும் காதை மந்தப்படுத்துவதற்கு ஒரு காரணமாகலாம். புறக்காதில் இயற்கையாகவே ஓரோர் அளவு குறும்பி இருக்கும்; இது அப்போதைக்கப்போது தானாகவே வெளிப்பட்டுவிடும். ஆனால், சிலருக்கு அளவுக்கு மிஞ்சிக் குறும்பி கட்டலாம்; அவர்கள் அதனைக் குறித்த காலங்களில் எடுத்துவிட வேண்டும்; மற்றப்படி, கேள்வி சற்று மந்தப்படும். பழக்க முள்ளவர்களைக் கொண்டே காதுக் குறும்பியை எடுக்கவேண்டும். வழியிலே வருவார் போவாரிடமெல்லாம் காதைக் காட்டக்கூடாது. குறும்பியை எடுப்பதற்குக் கரண்டி போன்ற சிறு கருவிகளை உபயோகிக்கலாம்; அல்லது காதிலே நீரேற்றிக் கழுவி விடலாம். கழுவுவதற்குப் பொரிகக்காடி (Boric acid)யோ இருகரிகை உவரம் (Bi-carbonate of soda) கலந்த நீரையோ உபயோகிக்கவேண்டும். இந்தக் கரையங்கள் (Solutions) அளவுக்கு மிஞ்சிச் சூடாகவோ குளிர்ச்சியாகவோ இருக்கக்கூடாது.

அதிகமாக நீந்துபவர்களும் நீரடியில் மூழ்குபவர்களும் தங்களுடைய புறக்காதைக் குறித்து நிரம்பவும் கவனித்துக்கொள்ள வேண்டும். காதிலே முன் ஏதாகிலும் வியாதியிருந்தால் அல்லது செவிப்பறையிலே துவாரம் ஏற்பட்டிருந்தால், பின்னும் அதிகக் கவனமாக இருக்கவேண்டும். காதுக்குள் தண்ணீர் புகுந்துவிடாதபடி நன்றாக நிலநிணம் (Vaseline) தோய்த்த ஒரு பஞ்சுத் தக்கையை வைத்துக்கொள்ள வேண்டும்.

நல்வழி

ஆ. நாட்டு வைத்தியம் பாகமுறை மிருகவாகடம் சுகாதாரக் குறிப்புக்கள்.

சுண்டைக்காய் வற்றல்.

1. பித்த அரோசகம்போம் பேராப் புழுச்சாகும்
உற்ற கிராணியறும் உட்பசியாந்—சத்தியமாய்ப்
பண்டைக் குதஆமம் பற்றும் இங்கியாரையுந்தான்
சுண்டைக்காய் வற்றலுண்ணச் சொல்

அகத்தியர் குணவாகடம்.

பித்த அரோசகம் போகும்; பேரா புழு சாகும்; உற்ற கிராணி அறும்; உட்பசியாகும்; சத்தியமாய் பண்டை குத (ஆசனத்துவாரம்) ஆமம் (சீதம்) பற்றும். இங்கு யாரையும்தான் சுண்டைக்காய் வற்றல் உண்ணச் சொல்.

2. சுண்டைக்காயில் ஈரம் 12.3 சதமும் பிசிதம் (Protein) 8.3 சதமும் கொழுப்பு 1.7 சதமும் கனியப் பொருள்கள் (Minral matter) 5.1 சதமும் நார்ச்சத்து (Fibre) 17.6 சதமும் கரி நீரகைப் பொருள் (Carbo-hydrate) 55 சதமும் சுதையம் (Calcium) ·37 சதமும் எரியம் (Phosphorus) ·18 சதமும் இரும்பு கிலோயிரச் சிரெடையில் 22·2 சதமும் இருக்கின்றன. 100 சிரெடையில் 269 காலரிச் சூடும் 750 மூல அலகு ஏ உயிர்ச் சத்தும் கிடைக்கும்.

Health Bulletin No. 23

3. வழக்கு:-முதிர்ந்த சுண்டைக்காயைப் போதுமான அளவு நன்றுய்ப் புளித்த மோரும் உப்புங் கலந்து காய வைத்து உலர்த்தி எடுத்துக்கொண்டு பதார்த்தமாக உபயோகிக்கலாம். பத்தியத்திற்கு ஏற்றது.

சுண்டை வற்றல், கருவேப்பிலை, மாங்கொட்டைப் பருப்பு, ஓமம், நெல்லி வற்றல், மாதளேயோடு, வெந்தயம் இவற்றைச் சமனெடை எடுத்துத் தனித்தனி இளவறுப்பாய் வறுத்துச் சூரணஞ் செய்து கூட்டித் திரிகடிப் பிரமாணமாகக் காலை, மாலை இருவேளையும், மோரில் கொடுக்க மேற்கூறிய நோய்கள் விலகும்.

(குணபாடம்) முருகேச முதலியார்.

4. "நீரிழிவு நோயாளி மாக்கூர்ப் பொருள்களையும் (Starch) சருக்கரையையும் சீரணிக்க முடியாது. ஆகையால், உரொட்டி சப்பாத்தி அரிசிச் சாதம் உருளைக் கிழங்கு முதலிய மாக்கூர்ப் பொருள்களைச் சாப்பிடுவதை நிரம்பவும் குறைத்துக் கொள்ளவேண்டும். தித்திப்புப் பதார்த்தங்களை அறவே விலக்கி விடுதல் நல்லது. அவர்கள் காய்கறிகளையும் கீரைத் தினுசுகளையுமே அதிகமாகச் சாப்பிடவேண்டும். பால் குடிக்கலாம். நாளடைவில் சிற்சில வகைப் பழங்களையும் சாப்பிடப் பழகிக் கொள்ளவேண்டும். மூத்திரத்தில் சருக்கரை இருக்கிறதா இல்லையா என்பதைச் சோதித் தறியப் படித்துக்கொள்ள வேண்டும்; மூத்திரத்தில் சருக்கரை இருக்கும் அளவுக்கு சருக்கரைப் பண்டங்கள் சாப்பிடுவதைக் குறைத்துக் கொள்ளவேண்டும். கணையச் (Pancreas) சத்திஞல் செய்யப்பட்ட மாத்திரைகளை, மருந்துக் கடைகளில் வாங்கி உட்கொள்ளலாம்; இவை மாக்கூர்ப் பொருள்களும் சருக்கரையும் சீரணமாவதற்கு அனுகூலம் அளிக்கும்"

நல்வழி.

5. காதைப் பேணும் விதம்: 1. காதிலேயுள்ள குறும்பி அதிக உபயோகமுள்ளது; அது மிகக் கசப்பானது. வேண்டிய அளவுதான் குறும்பி உண்டாகும். (அதிகமாக உண்டாஞலும், அதைச் சூதானமாக எடுக்க வேண்டும். ப-ர்)

2. காதுக்குள்ளே ஏதாவது ஒரு சிறிய பூச்சி புகுந்தால், அதை எடுப்பதற்குச் சிறந்த

வழி நல்லெண்ணெய்யையாவது சுத்தமான வேறு எண்ணெய்யையாவது நகச் சூடாகக் காய்ச்சிக் காதிலே வார்ப்பதுதான். இப்படிச் செய்வதால், பூச்சி வெளியே வரும் அல்லது இறந்து போகும். பூச்சி காதினுள்ளேயே இறந்துபோனால், கொஞ்சம் வெந்நீரைக் காதுக்குள்ளே அடித்தால் அது வெளியே வந்துவிடும்.

3. மூக்கை அதிகப் பலமாகச் சிந்தாதே; ஏனென்றால், இதனால் மூக்கிலும் தொண்டையிலுமுள்ள கிருமிகள் பறைக் குழாயி (Eustachian tube) னுள்ளே புகுந்து காதைச் செவிடாக்கலாம்.

4. குழந்தைகளைக் காதிலே அறையக் கூடாது; இதனாலும் காது அடிபட்டுச் செவிடாகலாம்

ஆரோக்கியமும் நீடித்த ஆயுளும்.

---

8. கிராமவாசிகள்: விபசாயிகள்.

பொருள் வளம்.

J. C. Kumarappa.

தற்காலம் எங்குத் திரும்பினாலும் 'பொருள் வளம்' 'செல்வம்' 'பணம்' என்னும் சொற்களையே பலர் மீண்டும் மீண்டும் சொல்லுவதை நாம் கேட்கிறோம். ஆனால் 'பொருள் வளம்' (Wealth) என்பதின் முழுப் பொருளை நம்மில் ஒரு சிலரே அறிந்திருக்கிறோம். நாம் 'பொருள் வளம் படைத்தல்' (Wealth-production) 'பொருள் பகிர் திட்டம்' (Distribution of wealth) 'தேசியப் பொருள் வளம்' (National wealth) என்றெல்லாம் பேசுகிறோம். 'பொருள் வளம்' என்பது என்ன? சாதாரணமாகச் செல்வம் அல்லது பொருள் வளம் என்பதால் ஏராளமான சொத்துப் பெற்றிருப்பதைக் குறிப்பிடுகிறோம். பொருள் வளம் என்பதின் உட் பொருள் யாதெனின், மக்கள் இன்ப வாழ்க்கைக்கு ஆக்கம் அளிக்கும் முறையில், பொருட்களைப் பயன் படுத்தக் கூடிய வசதி பெற்றிருத்தலேயாகும். ஒரு மனிதன் ஏராளமாகத் தங்கம் வைத்துக்கொண் டிருப்பதினாலேயே—அதைத் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய உபயோகிக்க முடியாத போது—பொருள் வளம் படைத்தவனாகான். நீரில் மூழ்கியிருக்கும் ஒருவன் தன் பை நிறையத் தங்கம் வைத்திருப்பனால், அவனுக்கு என்ன பயனாகும்? அது, அவனைச் சடுதியில் மூழ்க, கீழே இழுத்துத் தான் செல்லும்! ஆதலால், ஏதாவது ஒன்றைச் 'செல்வம் பொருள் வளம்' என்று நாம் கூறுவதற்கு முன், அதனால், மக்கள் நலத்திற்கு என்ன பயன் விளைகிறது? என்பதை ஆராய வேண்டி யிருக்கிறது. உட்காருவதற்கு மனிதர்களே இல்லாத இடத்தில், ஏராளமான நாற்காலிகளைச் சேர்த்து வைப்பதால், நாம் பொருள்வளம் படைத்தவர்களாவோமோ?

ஒரு நாட்டில் ஏராளமாக இரும்பு லோகக் கலப்பு மண் (Ironore) இருப்பதாலேயே, அந் நாடு பொருள் வளம் நிறைந்த தெனலாமோ? அப்படிச் சொல்லக் கூடியதில்லையானால், அக்கலப்பு மண்ணை எப்படிச் செல்வமாக மாற்றுவது? இவ் விரும்புக் கலப்புமண் செல்வப் பொருளாகுமானால், மக்கள் நலத்திற்கு அது அளிக்கும் ஆக்கத்தை நாம்

கவனிக்க வேண்டும். அந்த இருப்புக் கலப்பு மண் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் சந்தர்ப்பங்களை அளிக்கக் கூடுமானால், அத்தகைய சந்தர்ப்பங்களும் வசதிகளுமே பொருள் வளமாகும். ஓர் இளைஞன் தன் குடும்பப் பூர்வீகச் சொத்துக்களை விற்பதனாலேயே எப்படிச் செல்வம் சேகரிக்க மாட்டானோ, அதைப் போல அந்த இருப்புக் கலப்பு மண்ணை விற்று நாணய மாக்கிக்கொள்வதால், நாம் பொருள் வளம் உண்டாக்குபவர்கள் ஆகமாட்டோம். அவ் விளைஞன் வம்சி பரம்பரை வாரிசாக வந்த குடும்பச் சொத்தை விற்று நாணயங்களாக மாற்றிக் கொண்டு, அவற்றைத் தன்னுடைய வீண் ஆடம்பர வாழ்க்கையில் தீர்த்து விடலாம். ஆனால், அப்படிச் செய்வது பொருளீட்டும் (Wealth production) செயலாகாது.

பொருள் வளத்தைப் பெருக்கும் விதம்

நம் நாட்டார் இங்குள்ள நாட்டு மூலப் பொருள்கள் விளை பொருள்களை (Raw Materials) யெல்லாம் ஆக்கத் தொழில்களில் (Industries) தாங்களே பயன்படுத்தி வேலை செய்து சமுகத்தின் உபயோகத்திற்குத் தேவையான பண்டங்களைச் செய்வார்களானால், அது பொருள் வளம் படைக்கும் செயலாகும். அப்படிச் செய்து, செல்வம் கொழிக்க மக்களுடைய வாழ்க்கை வசதிகளை வளர்க்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏராளமாக இருந்தும் அப்படிச் செய்யாமல், மூலப்பொருள்களைக் காசுக்கு விற்றுச் செலவழிக்க, அன்னிய நாடுகளுக்கு அனுப்பிக்கொண்டு வருகிற நாம் எத்தகைய ரென்றால், தன்னுடைய பூர்வீகக் குடும்பச் சொத்துக்களை விற்று வீண் செலவு செய்யும் அறிவிலியான இளைஞனைப் போன்றவர்கள்தான். அந்தோ! இந்நிலை வெகு விரைவில் மாறும்படி, நாம் தீவிர முயற்சி செய்யாமலிருப்பது பரிதாபகரமாக இருக்கிறது.

இந்திய நாட்டின் மூலப் பொருள்களைப் பயன்படுத்தி ஆக்கத் தொழில்களைச் செய்து செல்வம் படைத்தல், இந்திய மக்களின் பிறப்புரிமையாகும். ஆதலால், நம் நாட்டு மூலப் பொருள்களை (Raw Matrials) பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அனுப்பிப் பயன்படு பொருள்களாக்க விடுவது, நம் நாட்டை வறுமையில் ஆழ்த்தும் மூடச் செயலாகும். இதே காரணமாக, எவ்வளவுக் கெவ்வளவு முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக மூலப் பொருள்களும் கிடைக்கும் அவ்வப் பிரதேசங்களிலேயே, (அதாவது மூலப் பொருள்கள் தோன்றும் அல்லது விளையும் கிராமம் நகரம் நாட்டுப்புறம் தாலுகா ஜில்லா முதலிய இடங்களிலேயே) அங்கங்குள்ள மக்கள் தங்கள் ஆக்கத்தொழில்களில் ஈடுபட்டு அம்மூலப் பொருள்களை முடிந்த வேலைப்பாடு பெற்ற பயன்படு பொருளாக (Finished goods) செய்து கொள்ள வேண்டும்' என்று அடிக்கடி வற்புறுத்திச் சொல்லப்படுகிறது; உதாரணமாகப் பருத்தி எண்ணெய் விதைகள் முதலியன விளையும் கிராமங்கள் அல்லது நாட்டுப் புறப் பிரதேசங்களில் அங்கங்கேயே நூல் நூற்று ஆடை நெய்தலும் செக்குகளிலிட்டு அரைத்து எண்ணெய் எடுப்பதும் போன்ற பயன்படு வேலைகளைச் செய்தாக வேண்டும். அப்படிச் செய்வதால், பஞ்சும், விதைகளும் ஆடையும், எண்ணெய்யும் ஆக்குவதற்குள் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தத்தம் ஜீவியத்தை நடத்தத் தொழில்களும் நேரிய முறையில் உழைப்பும் ஊதியமும் அளித்து நாட்டின் பொருள் வளத்தைப் பெருக்கவும் முடியும். இப்படியாக, 'ஆங்காங்கு உள்ளோர் அங்கங்கே விளையும் மூலப் பொருள்களைப் பயன்படு பொருளாகச் செய்து உழைப்பும் ஊதியமும் பெற்று இயற்கை இன்பத்துடனும் தன்மதிப்புடனும் சுதந்திரத்துடனும் வாழ்வதையே உண்மைச் 'சுதேசியம்' எனக் காந்தியடிகள் தமது "யௌவன இந்தியா"ப் பத்திரிகையில் பல முறை அழுத்திக் கூறி அறிவுறுத்தியுள்ளார்.

'அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்,
திருக்குறள்.

என்று நாயனாரும் பொறித்துள்ளார்.

குடிசைத் தொழிற் பெருக்கம்.

மற்றும் பருவுடல் வாழ்வுக்கு ஏற்ற பண்டங்களைச் செய்வதில் மட்டுமே கருத்தைச் செலுத்தி அதிலேயே ஆழ்ந்து விட்டோமானால், பொருள் வளத்தின் உண்மையான தன்மையை அறியாதவர்களாகி ஏமாறிப் போவோம். நாம் உண்மையான பொருள் வளத்தை உண்டாக்கிப் பெருக்க விரும்பினால், நம் நாட்டு மூலப்பொருள்களைப்பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதும் கூடாது; பெரிய ஆக்கத் தொழிற்சாலைகளில் பொருள்களைப் பெருவாரியாகச் செய்வதில் கவனம் முழுவதையும் செலுத்துவதும் கூடாது; அப்படிச் செய்வதாலும், நாம் செல்வம் திரட்ட முடியாது.

நம் நாட்டு மக்களே, நம் நாட்டு மூலப் பொருள்கள் அனைத்தையும், வேலைப்பாடு முடிந்த பயன் படு பொருளாக (Finished Goods) செய்திடும் படிக்கும், அப்படிச் செய்யுங்கால் ஆக்கத் தொழில்களில் (Manufacturing Industries) கோடிக்கணக்கான நம் மக்கள் நேரிய முறையில் ஈடுபட்டு உழைக்கும் படிக்கும் வசதிகள் அமைப்பதால்தான், நாம் நம் நாட்டைப் பொருள் வளம் படைத்த தாக்கலாம்.

அதுவும் ஒரே இடத்தில், பூதாகார நிலையில், பெருவாரியாகப் பண்டங்களைச் செயற்கை முறையில் செய்து குவிக்கும் நெருக்கடியான இராக்கத ஆக்கத் தொழில் முறையில் (Centralised Industries) செய்யக் கூடாது. இயற்கையோடு இசைந்த இன்பச் சுதந்தர நிலையில், கிராம அளவிலும் குடிசையளவிலும் தொழில்களைப் பரப்பிப் பொருள்களைச் செய்வித்துக் கொள்வதே நன் முறையாகும். ஏனென்றால், இப்படி இயற்கை முறையில் செய்யும் தொழில்கள் நடைபெற்று வருவதால்தான், பெருகி வரும் பொருள் வளம் நேரிய முறையில் சரியானபடி ஒரே யளவாக மக்கள் இடையே பகிர்ந்து வரக்கூடிய வசதி வாய்க்கும். மக்களை மக்கள் அடிமை செய்து அருளையும் அன்பையும் அழிக்கும் அட்டூழியம் அப்போது தான் அழிவுற்று அகில உலகும் உய்யும் நிலை பிறக்கும்.

'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்'

(செங்குந்தமித்திரன்.) —திருக்குறள்.

9. கதை: சரித்திரம்

கூறுகெட்ட குப்பான்

[ஒரு தால்சுடாய் கதை: தமிழ் நாட்டிற்கேற்பச் சற்றே மாற்றியது.]

I

முன்னொரு காலத்தில், பாண்டியவள நாட்டில், பெரிய சமுசாரியொருவனிருந்தான். அவனுக்கு மூன்று ஆண் மக்களும் ஒரு பெண்ணும் இருந்தனர். மூத்தவன் கலிப்பகை; சிலம்பாட்டங்களிலும் வேட்டைகளிலும் பிரியமுள்ளவன். அதற்கிளையவன், பேய்ச்சிமுத்து; ஒரு சாப்பாட்டிராமன். அதற்கும் இளையவன், நல்லதம்பி; ஒரு கூறுகெட்ட குப்பான். அவர்களெல்லாருக்கும் இளைய பெண், வாழ்வரசி; ஒரு செவிடி; வாயும் பேசாள். கலிப்

பகை சேரநாட்டரசனிடம் யுத்த வீரனுகச் சேவகம் செய்யப்போனுன். பேய்ச்சிமுத்து, வியாபாரம் செய்ய, காவிரிப்பூம்பட்டினத்திற் குச் சென்ருன். நல்லதம்பியும் வாழ்வரசி யுமே, வீட்டில் பெற்ருேர்களுடனிருந்து வந் தார்கள். முரட்டு வேலையெல்லாம் நல்லதம்பி யே செய்து முடிப்பான். வீட்டு வேலையெல் லாம் வாழ்வரசி செய்துவிட்டு, காட்டுக்கும் நல்லதம்பிக்கு உதவிசெய்யப் போவாள்.

கலிப்பகை சில ஆண்டுகளுக்குள்ளாகச் சேனுதிபதியானுன். சேரன் மகளையும் மனைவி யாகக் கொண்டான். ஏராளமான நிலம்புலங் களும் சேர்த்தான். நல்ல சம்பளமும் வாங்கி வந்தான். அவன் சம்பாத்திய மெல்லாம் அவன் மனைவியின் செலவிற்குக் காணவில்லை. அவள் பணத்திற்கு நெருக்க, அவன் தன் பண்ணை பாட்டம் பார்த்துவந்த கணக்கப் பிள்ளையைக் கூப்பிட்டு, பணம் கேட்டான். அவன் "நிலமிருந்தால், போதுமா? நிலத்தில் பாடுபட வேண்டாமா? பாடுபட ஆட்கள் வேண்டாமா? மாடு கன்றுகள் வேண்டாமா? கலப்பை, மண்வெட்டி கூடை முதலியன வேண்டாமா? நாம் பாடுபடாது போனுலும், நமக்காக எவரேனும் நெற்றி வியர்வை நிலத் தில் விழப் பாடுபடாமல் போனுல், எங்கிருந்து நமக்குப் பணம் வரும்?" என்ருன்.

அதைக் கேட்டதும் கலிப்பகை தன் தகப்பனுரிடம் போனுன். "நீர் நிரம்ப மாடு கன்று வைத்துக்கொண்டிருக்கிறீர். எனக்கோ, என் நிலங்களில் பாடுபட மாடு கன்றுகளில்லை. உம்முடைய சொத்தில் மூன்றிலொரு பாகத் தைப் பிரித்துத் தாரும்" என்ருன். அதற்கு அவன் தகப்பன், "நீ பாடுபட்டுத் தேடி என் வீடு கொண்டுவந்து சேர்த்தது ஒன்றுமில்லை. உன் தம்பியும் ஊமைப் பிள்ளையுமாகப் பாடு பட்டுத் தேடி வைத்திருப்பதை உனக்குப் பிரித்துக்கொடுத்திடவா?" என்ருன். "அந்தக் குப்பானுக்குச் சொத்திருந்து என்ன செய்ய? அந்த ஊமைப் பிள்ளைக்குத்தான் என்ன? கலியாணமா? காட்சியா? அவளுக் கென்ன? சொத்தும் சுகமும் வேண்டியிருக் கிறது? எனக்கு இன்றைக்குதவாத சொத்து, பின்னிருந்தாலென்ன? இல்லாது போனு லென்ன? என்று கோபமாகப் பேசவும், கிழ வனும் நல்ல தம்பியைக் கூப்பிட்டுக் கேட் போம் என்ருன். குப்பானும் வந்தான். கிழ வன் அவனைக் கேட்டான். அதற்கு, அவன் "அவர் சொல்லுகிறது சரிதான். அவருக்கு வேண்டியதை யெடுத்துக்கொள்ளட்டும்" என்ருன். அப்படியே கலிப்பகையும் நிலங் களை தவிர்த்து மற்றச் சொத்துக்களிலெல் லாம் மூன்றிலொரு பங்கைப் பிரித்துக் கொண்டு தன் ஊர் போய்ச் சேர்ந்தான்.

காவிரிப்பூம் பட்டினத்திற்குப் போன பேய்ச்சிமுத்தும் அங்கே நிறையப் பணம் சம் பாதித்தான். அங்கேயே ஒரு பெரிய வியா பாரியின் மகளைக் கலியாணம் செய்து கொண் டான். இருந்தாலும், அவனுக்கும் ஆசை விடவில்லை. ஊருக்கு வந்தான். என் பங்கைப் பிரித்துக் கொடும் என்று தன் தகப்பனைக் கேட்டான். அவனுக்கும் பிரித்துக் கொடுக்கத் தகப்பனுக்கு மனமில்லை. "உன் சம்பாத்தியம் ஏதேனும் என்னிடம் கொண்டுவந்து கொடுத் திருக்கிருயா? நான் வைத்திருக்கிறேனு? என் னிடம் வந்து கேட்கிருயே? உனக்கு நியா யமா? பாவம், அந்த ஊமைப் பிள்ளையும் நல்லதம்பியும் இரவும் பகலுமாக அரும் பாடு பட்டுத் தேடி வைத்திருக்கிறதை, உனக்குப் பிரித்துக் கொடுக்கவா?" என்ருன். அதற்கு அவன் "அந்த முட்டாள் பய்யனுக்கு எதற்குச் சொத்தும் சுகமும்? அவனுக்கு ஒருத்தியும் வாழ்க்கைப்படப் போகிறதில்லை. அவன் கலி யாணம் முடிக்கப் போகிறதுமில்லை. அந்தப் பெண்ணுக்குந்தான் சொத்தும் சுகமும் இல் லாமல் போனுல், கெட்டுப்போகிறதென்ன," என்ருன். அது சமையம் நல்லதம்பியும் அவர் களிருக்குமிடம் வந்தான். அவனைப் பார்த்து,

பேய்ச்சிமுத்து, "இருக்கிற நெல்லுப்புல்லில் பேர் பாதி எனக்குக் கொடுத்து விடு. பெரிய மாடுகளையும் எனக்குக் கொடுத்துவிடு. அவை உனக்கு உழவுக்கும் உதவா," என்றான். அதற்கு அவன் இருந்துமிருந்தும் இவற்றைத் தானே கேட்டிருக்கிறான் என்று நினைத்துச் சிரித்தான். "அதற்கென்ன எடுத்துக் கொண்டுபோ, எனக்கு வேண்டியதை நான் சம்பாத்தியம் செய்து கொள்ளுகிறேன்," என்று சொன்னான்.

அதற்கு மேல், பேய்ச்சிமுத்தும் இருந்த தானியத்தை யெல்லாம் வண்டிகளிலேற்றிக் கொண்டுபோய் விட்டான். நோய்ந்த மாடுகள் இரண்டுதான் கூறுகெட்ட குப்பான் உழவுக்கு மிஞ்சின. ஆனால், நல்லதம்பி அதற்கும் வருந்தாமல் பின்னும் பாடுபட்டு வந்தான்.

II

குட்டிச் சாத்தான் பார்த்தான், இவற்றை யெல்லாம். காலம் என்னமாகக் கெட்டு வருகிறது! நம் ஆட்சிக்கு இனி இடங்கிடையாது போலிருக்கிறதே! அண்ணன் தம்பிகளுக்குள் சண்டைக்கு இடமில்லை யென்றால், வேறு யார் தான் சண்டைபோட்டுக் கொள்ளுவார்கள். எல்லாம் அந்தக் கூறுகெட்ட குப்பான் செய்கிற வேலை; அவனை ஒரு கை பார்க்கிறேன், என்று சொல்லிக் கொண்டே தன் குறளிகளைக் கூவியழைத்தான். அவை மூன்றும் வரவும், "ஒரு வேலை சொல்லுவேன்; முடித்து வந்தால் சரி; இல்லையானால் உங்களை ஒழித்து விடுவேன்." என்று மிகுந்த வயிற்றெரிச்சலோடு சொன்னான். அதைக் கேட்டு அந்த மூன்று குறளிகளும், எது சொன்னாலும் செய்து முடிக்கிறோமென்று பதில் சொல்லின. அதன் பின், காரியத்தைச் சொன்னான். எப்படிச் செய்து முடிக்கப் போகிறீர்களென்று கேட்டான். "இது தானா பிரமாதம்? ஆளுக்கொருவரைப் பிடித்துக் கொள்ளுவோம். அவர்களைப் பலவகைத் தொந்தரவுகளுக்குள்ளும் ஆக்கிச் சீரழிப்போம் அதன் பிறகும் அவர்களிடம் வெகு திறமையாக வேலை செய்து அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் ஆகாதபடி பகையை வளர்ப்போம்" என்று ஒன்று சொன்னாற் போல் சொல்லின.

"அதுதான் சரி; உங்களுடைய வேலை உங்களுக்குத் தெரிந்திருக்கிறது; அதைச் செய்து முடித்துத்தான் வரவேண்டும். அவர்களுடைய காதைப் பிடித்து இழுத்துக் கொண்டு வரவேண்டும்; அல்லது அவர்கள் முதுகுத்தோலை உரித்துக்கொண்டு வரவேண்டும். அதற்கிடையில் வந்தால், உங்கள் கண்விழிகளைப் பிடுங்கிவிடுவேன்" என்று அவற்றைப் பயமுறுத்தி யனுப்பினான்.

குறளிகள் குட்டிச்சாத்தானை விட்டுப் புறப்பட்டதும், பக்கத்திலுள்ள சுடுகாட்டு மேட்டிலுட்கார்ந்துகொண்டு, யார் யார் எவரைப்போய்ப் பிடிப்பது, எப்படி வேலை செய்வது என்று பேச ஆரம்பித்தன. ஒவ்வொன்றும் இலேசான வேலையையேதான் செய்து முடிக்க ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் நினைத்தன. இந்த விவகாரமே எளிதில் முடிவதாக இல்லை. கடைசியாகச் சீட்டுப் போட்டு வேலையைப் பிரித்துக் கொள்ளுவதென்றும், எது தன் வேலையை முந்தி முடித்து விட்டாலும் அது மற்றவற்றிற்கு வந்து உதவி செய்வதென்றும் ஒருவாறாகத் தங்கள் விவகாரத்தைத் தீர்த்துக்கொண்டன. அப்படியே சீட்டுப் போட்டும் வேலையைப் பிரித்துக் கொண்டு, பின் சந்திப்பதற்கு ஒரு காலத்தைக் குறிப்பிட்டுவிட்டு, தன் தன் வேலையைப் பார்க்கப் போயின.

கொஞ்சக் காலத்திற்குப் பின், முன் குறிப்பிட்டபடி, பழைய சுடுகாட்டு மேட்டிலேயே திரும்பவும் கூடின. அப்பொழுது முதல் குறளி சொல்லிற்று, "என் வேலை யெல்லாம் சரியாய் நடந்து வருகிறது, நாளையே கலிப்பகை அவன் அப்பன் வீட்டிற்கு வந்து சேர்வான். என்று கெம்பளிப்

பாகச் சொல்லியது. அதை எப்படி செய்து முடித்தாய்? என்று மற்றவை கேட்கப் பின் வருமாறு பதில்சொல்லியது. கலிப்பகை யைப் போய்த் தன் மாமனுகிய அரசனிடம், "எனக்கு எதும் பெரிதல்ல; இந்த உலகத் தையே தோற்கடித்தும் அதனைக் கைவசப் படுத்த என்னால் முடியும்; எனக்கு ஒரு சந் தர்ப்பம் மட்டும் கொடுத்துப்பார்க்கவேண் டும்." என்று மண்டைக் கர்வத்தோடு சொல் லச் செய்தேன் அதற்கு அந்த அரசன் அப்ப டியே செய்து காட்டலாமென்றான். உடனே அவன் சோழ நாட்டரசனை சண்டைக் கிழுத் தான். இரு நாட்டாரும் சண்டைக்கு நெருங்கி வரவும், நான் போய்க் கலிப்பகையின் வெடி மருந்தை யெல்லாம் நனைத்துப் பாழாக்கி னேன். சோழ நாட்டரசனுக்குதவியாகவும் சண்டைக்கு ஆட்கள் திரட்டி நிரம்பச்சேர்த்து விட்டேன். எதிர்க் கூட்டத்தைப் பார்த்த வுடனேயே, கலிப்பகையின் யுத்த வீரர்கள் கலங்கிப்போனார்கள். அவர்கள் இவர்களைச் சுற்றி வளையவும் அவர்களைச் சுடும்படியாக இவர்களுக்குக் கலிப்பகை கட்டளை யிட்டான். சுட்டுப்பார்த்தார்கள்; சுடும் எழும்பவில்லை. ஓடப்பார்த்தார்கள். எந்தப் பக்கம் ஓடினாலும், ஓடித்தப்ப வழியில்லை. எதிரிகள் எங்கும் வளைந்திருந்தார்கள். அவர்கள் கத்திக்கு இவர் கள் இரையானார்கள். எல்லாம் தன் சேனுபதி யால் விளைந்த வினையென்று சோழனுக்குச் சொல்லி அவனைச் சமாதானப்படுத்தி யனுப்பு முன் சேரன்பாடு சங்கடமாகப் போய்விட்டது. அதன் பின் கலிப்பகையைத் தன் மருமகனென் றும் பாராமல், அவன் நிலங்கரைகளையும் பிடுங்கிக்கொண்டு, அவனைச் சிறையிலடைத் தான். அதன்மேல் நான் அவனை அதிலிருந் தும் தப்பியோடுவதற்குதவி, தன் ஊர் தேடிப் போகச்செய்திருக்கிறேன். மற்றதெல்லாம், நாளை தெரியும்; அதற்குப் பின் நான் உங்க ளோடு உங்களுதவிக்கும் வரலாமென்றது.

அதைக் கேட்டதும் இரண்டாங்குறளி, "எனக்கு உன் உதவி தேவையில்லை. என் வேலையும் அனேகமாய் முடிந்துவிட்டது." என்று தன் வேலையைச் சொல்லத் தொடங்கி யது. "முதலாவதாக, நான் பேய்ச்சி முத்தை ஒரு பெரும் பேராசைக்காரனுக்கினேன். அவன் எதைக் கண்டாலும் வாங்குவதென்று ரம்பித்தான். அவன் கையிலிருந்த பணமெல் லாம் செலவாகி விட்டது. இப்பொழுது, கடன் வாங்கியும், அப்படி வாங்கிக்கொண்டி ருக்கிறான். வாங்கிய கடனை அவன் கொடுக் கப் போகிறதில்லை. அவன் தலைக்குக் கல் வைத்தாகிவிட்டது. இனி, அவன் நிமிரப் போகிறதில்லை. எப்படியும் கடனைத் தீர்த்து விட வேண்டுமென்று ஊரைத்தேடி யோடு வான். அப்பொழுது என் வேலையையும் முடித்துக்கொள்ளுவேன்." என்றது.

அதன் பின் மூன்றாவது குறளியை உன் வேலை எப்படி யிருக்கிறதென்று மற்றக் குறளி கள் கேட்க, "என் வேலைதானே, ஒன்றும் ஆகவில்லை. நல்லதம்பி குடிக்கிற சாராயத்தை யும் கலக்கிப்பார்த்தேன். அவன் வயிற்றுக் குள் போயும் வயிற்று வலியை உண்டாக் கிப் பார்த்தேன். அவன் உழுகிற நிலத்திற்குள் போயிருந்து அவைகளைப் பாறை போலாக்கி யும் பார்த்தேன். பிறகு கொழுவை முறித்தும் பார்த்தேன், ஒன்றுக்கும் அவன் மசிகிற னில்லை. அவன் பாட்டிற்கு அவன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறான். ஒரு கொழு முறிந்தால், இன்னொரு கொழுவைக் கொண்டு வந்து மாட்டிக்கொள்ளுகிறான். பிறகு கொழு வையே அசையவொட்டாது பிடித்துப் பார்த் தேன். என் கையில்தான் வெட்டு விழுந்தது. அவன் உழவு நிற்கவில்லை. இன்னும் கொஞ் சந்தான் உழவு பாக்கி யிருக்கிறது. அந்தக் குப்பான் வேலை செய்து கொண்டிருக்கிற வரைக்கும், அவன் அண்ணன் மார்களுக்கும் கவலை யில்லை. என்ன செய்வதென்று தெரிய வில்லை" யென்று விசாரப்பட்டது. அதன் பின், முதல் குறளி தான் வந்து மறு நாள் உதவி செய்வதாகச் சொல்லவும், அன்றைய கூட்டம் கலைந்தது. (தொடரும்.)

10. கைத் தொழில்: குடிசைத் தொழில்

சென்னை வியாபாரக் கைத்தொழில் இலாகா அறிக்கை (1939—40)

இலங்கைச் சட்டசபை சமீபத்தில் செய்திருக்கும் விவசாய விளைபொருள் கட்டுப்பாட்டுச் சட்டம் Agricultural products (Regulation) ordinance, 1940 ஜுன் முதல் அமுலிலிருந்து வருகிறது. அதனை யனுசரித்து வெளி நாட்டு விவசாய விளைபொருள்களின் வரத்தைக் கட்டுப்படுத்த, ஒரு கழகமும் அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் கழகத்தின் அனுமதி (License) யின்றி எவரும் அங்கிருந்து ஏற்றுமதி செய்ய முடியாது. மொத்த இருப்பில், உள்நாட்டு மகசூல் இவ்வளவிருக்க வேண்டுமென்றும் அது திட்டம் செய்யலாம்; உள்நாட்டு விற்பனை விலையையும் அது குறிப்பிடலாம். இந்த நிலைமையில், தஞ்சாவூர் சிறுமணிநெல் இலங்கைக்குப் போவதற்குத் தடையேற்பட்டு விடுமோவென்று பயப்பட வேண்டியது மிருக்கிறது. இது வரை உயர்ந்த விலை சிறுமணி நெல்லை இலங்கைக்கு விற்றுவிட்டுக் குறைந்த விலை பர்மா நெல்லைத் தஞ்சாவூர் ஜில்லா வாங்கிக் கொண்டிருந்தது. அது வெகு இலாபகரமாகவு மிருந்தது. சிறுமணி நெல் ஏற்றுமதிக்கு இடைஞ்சல் நேராது கவனித்து வரப்படும்; நேர்ந்தால், வேண்டியன செய்ய, அது சமையம் சென்னை அரசாங்கமும் தூண்டப்படும்.

* * * *

அக்கறை யுள்ளவர்கள் விறகும் தேங்காய்த் தண்ணீர் அல்லது பதநீரும் வேலைக்குக் கூலியாட்களும் இனமாகக் கொடுப்பதுடன், அடுப்புக் கட்டவும் தேங்காய்த் தண்ணீர் அல்லது பதநீர் காய்ச்ச உபகரணங்கள் கொண்டு வரவும் திருப்பிக் கொண்டு போகவுமாகக் கூடிய செலவிற்கு ரூ 50 க்கு மேற் போகாமலும் கொடுப்பார்களென்றால், அவர்கள் குறிப்பிடும் பிரதேசங்களில் வந்து தேங்காய்த் தண்ணீர் அல்லது பதநீரை வெள்ளைச் சருக்கரையாக்கும் முறையை, அவர்களுக்குக் கைத்தொழில் இலாகா செய்து காட்டத் தயாராக இருக்கிறது.

* * * *

இப்போதிருக்கும் குடிசைத் தொழில்களில் எவற்றையெல்லாம் இலாபகரமாகச் செய்துவர முடியும், அப்படிச் செய்வதற்கு எவற்றிற் கெல்லாம் அரசாங்க உதவி அல்லது பாதுகாப்பு வேண்டிய திருக்குமென்பதைப் பற்றியும்; 1927-ம் வருடத்தில் வெளியான குடிசைத் தொழில் நிலைமை யறிக்கையை (Survey of Cottage Industries) காலத்திற் கேற்பத் திருத்திவரவும் ஒரு அனுபவ மிகுந்த அதிகாரியை நியமிக்க வேண்டிய தவசியம்.

* * * *

திருந்திய கருவி கரணங்கள் அனேகக் குடிசைத் தொழில்களுக்கு வெகுவாகப் பயன் படக் கூடுமாதலால், அப்படிக் கருவி கரணங்களும் செய்யப் படவேண்டும். செய்பொருள்கள் விற்பனைக்குச் சௌகரியம் ஏற்படுமென்றால் அனேகக் குடிசைத் தொழில்கள் விருத்தியாகவும் செய்து வரப்படலாம்; அதற்கான ஏற்பாடுகளும் செய்யப் படவேண்டும். காலத்திற் கேற்பப் புதிய குடிசைத் தொழில்களும் ஆரம்பிக்கப் படவேண்டும். துணிமணிகளிலும் மற்றும் சில குடிசைத் தொழில்களிலும் புதிய இரகங்கள் (Design) போடவேண்டும். இதற்காகச் சென்னை அருங்கலைத் தொழிற் பள்ளியில் ஒரு ஆசிரியர் நியமிக்கப் படவேண்டு மென்றும் அரசாங்கத்திற்குச் சொல்லப் பட்டிருக்கிறது. குடிசைத் தொழில் நிலைமையைப் பற்றி ஆராய்ச்சி செய்த பின், பணமிருக்கு மென்றால் சில சில ஜில்லாத்

தொகுதிகளுக்குக் குடிசைத் தொழிலதிகாரிகளும் நியமிக்கப் படலாம்.

* * * *

சப்பான் அரசாங்கம் ஆலைத் தொழில்களில் மட்டுமல்ல; குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்து வருவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறது. அங்கே ஆயிரக்கணக்கான இடங்களில் பத்துப் பேருக்குக்குறைந்த தொழிலாளிகளாக இருந்தும் வேலை செய்து வருகின்றனர்; வீடுதோறும் சில கூலியாட்களின் உதவிகொண்டும் குடிசைத் தொழில்கள் செய்துவரப் படுகின்றன. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் செய் பொருள்களின் அறுபது எழுபது சதமானம் அப்படிப்பட்டவர்கள் செய்வனவாகும்.

* * * *

கையால் செய்கிற மையொற்றுக் காகிதம் ஆலையில் செய்வதைக் காட்டிலும் சிறந்ததாகவுமிருக்கிறது. அதை உபயோகிப்பது இலாபகரமாகவுமிருக்கும். ஆகையால் அரசாங்கத்துக்கும் அப்படிக் காகிதமே வாங்கலாம்.

* * * *

கேரள சவர்க்காரச் சாலையில் அட்டைக் கடி நிவர்த்திக்காக 'இலீச்செக்சு' (Lelchex) என்றொரு மருந்து புதிதாகச் செய்யப் பட்டிருக்கிறது. மலந்தோட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு இது மிகவும் பிரயோசனமாயிருக்கும். அட்டையே கடிக்காது.

* * * *

தேங்காய்ச் சிறட்டைக்கரி இலங்கையில் விருத்தியாக உண்டுபண்ணப் படுகிறது. அது விசப் புகைகளைத் தவிர்க்கும் முகமூடிகள் செய்யவும், சருக்கரை, எண்ணெய், குடிதண்ணீர், காற்று, மண்ணெண்ணெய், நுண்ணிய இரசாயனப் பொருள்கள் முதலியனவற்றைச் சுத்தப்படுத்தவும், சாயத்தைப் போக்கவும், கிரிசோட் (Creosote) செய்யவுமுதவுகிறது. இங்கேயும், மேலக்கரை சில்லாக்களில் அதனைச் செய்து நல்ல இலாப மடையலாம்.

---

11. செய்தித் திரட்டு:

அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்

1. 1347, 1348; 1349ம் பசலிகளில் செய்துவந்த நிலவரிக்கழிவு 1350ம் பசலியிலும் செய்யப்படும்.

Press Communique.

2. நம் நாட்டுப் பஞ்சு சப்பானுக்குப் போவதற்கில்லாததால் அவ்வளவிற்கு நம் நாட்டில் வெடிக்கும் பருத்தியை என்ன செய்வதென்ற யோசனையிலிருக்கிறது.

Industry.

3. இங்கிலாந்தில் இருபது இலட்சம் ஏக்கருக்குமேல் புதிதாகப் பயிரிடத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மை வாரக் கூலியையும் 48 சில்லிங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. (இதன்படி, ஒரு விபசாயக் கூலியின் மாத வருமானம் ரூ. 150க்கு மேலாகும். ப-ர்) இருபது இலட்சம் ஏக்கரையும் மூன்று இலட்சம் பண்ணைகளாகப் பிரிக்கும் வேலை நடந்துகொண்டிருக்கிறது. இவற்றை உழுது பயிரிட, 16000 மோட்டார்க் கலப்பைகளும் (Tractors) தயாராகின்றன.

வர்த்தக ஊழியன்

4. சண்டைக்காக, பீங்கான் மண் பாண்டங்கள் (Crockery) எனுமல் (Enamel ware) சாமான்கள், கற்சாமான்கள் (Stone ware) துடைப்பங்கள் (Brush ware) வெட்டுக் கருவிகள் (Cuttery) மற்றும் கருவிகள் இவை போன்ற சில்லறைச் சாமான்கள் கொடுத்து வரும்படியாக (Supply) சொல்லப்பட்டிருக்

கிறது. கயிறு வகைச் சாமான்களும் (Coir products) இயந்திரச் சாமான்களும் Engineering items) மிதியடிகளும் சோடுகளும் (Boots and Shoes) இங்கிருந்து அனுப்பக் கூடுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது.

Press Note No. 128.

5. கலப்புச் சாயம் (Synthetic Dyes) நம் நாட்டுக்கு வருவது நின்று போயிருப்பதின் நிமித்தம், சாயந் தோய்க்கிறவர்களும் சாயத் துணி மணிகள் நெய்கிறவர்களும் சங்கடப் படுவதால், உள்நாட்டுச் சாயப் பொருள்களைக் கொண்டு பல நிறச் சாயங்களும் இறக்கிப் பார்க்கப்பட்டிருக்கின்றன. இம் முறையால் சாயச் செலவு அதிகமேயாகக்கூடும். என்றும், தற்சமையம் சாயம் பெறுவதற்கு இதைக் கையாளுவதைத் தவிர்த்து வேறு வழியில்லை.

இதன் விபரங்கள் தெரிய விரும்புகிறவர்கள், தாங்கள் சாயமேற்ற விரும்புவது நூலா, பட்டா, கம்பளி மயிரா வென்பதைக் கண்டும் பெரிய கவரொன்று 2½ அணுத் தபாற்றலை வைத்தும் தங்கள் சில்லா கலக்டருக்கு அல்லது வண்ணாரப்பேட்டை, அரசாங்க நெசவுப் பள்ளித் தலைவருக்கு (Principal Government Textile Institute, washermanpet, Madras) எழுதினால், அவர்களுக்குத் தேவையான துண்டுப் பத்திரிகை அனுப்பப்படும். சாயந்தோய்ப்பதிலாவது வேண்டும் நிறம்பெறுவதிலாவது சிரமம் ஏற்பட்டால், அதைப் பற்றி மேலே சொல்லிய தலைவருக்கெழுதி வேண்டும் தகவல்கள் தெரிந்துகொள்ளலாம். சாயப் பொருள்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டால், சென்னை மலங்காட்டைப் பயன்படுத்தும் அதிகாரி (Forest Utilisation officer Madras)க்கெழுதி அவருதவியையும் பெற்றுக்கொள்ளலாம். சென்னைப் பள்ளியில் நடக்கும் சாய வேலைகளை நேரில் பார்க்க விரும்புகிறவர்கள், அதுபற்றி முன் தகவல் கொடுத்து நேரத்தைக் குறிப்பிடச் செய்து, அந்த நேரம் போய்ப் பார்த்து வரலாம்.

Press Note No. 127.

6. 1939-ம் வருடத்திய பம்பாய் கடை வியாபாரச் சிப்பந்திகள் சட்டம்: இந்தச் சட்டம் நவம்பர் மீ 15 உ முதல் பம்பாய் ஆமதாபாத்து, பூனு, சோலாப்பூர் ஹுப்ளி நகரங்களில் அமுலுக்கு வந்திருக்கிறது. அதன்படி இரவு 9 மணிக்கு மேல் எந்தக் கடையிலும் வியாபாரம் செய்தல் கூடாது. காலையில் கடை திறக்கும் நேரமும் அரசாங்கத்தால் குறிக்கப்படும். எவரும் சாதாரணமாக 9½ மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய வேண்டியதிராது. எழு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்பவர்களுக்கு இடையில் ஒரு மணிநேர சாவகாசமும் ஐந்து மணி நேரத்திற்கு மேல் வேலை செய்பவர்களுக்கு இடையில் அரைமணி நேர சாவகாசமும் கொடுக்க வேண்டும். பெரிய வியாபாரத் தலங்களில் அரைமணிநேர சாவகாசம் வேண்டும். இடையில்லாமல் 4½ மணி நேரத்திற்கு மேல் தொடர்ந்து வேலை வாங்கக் கூடாது.

உணவு விடுதிகள் பலகாரக் கடைகள் முதலிய வற்றிலும் எவரையும் 10 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்கக் கூடாது. எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்பவர்களுக்கு இடையில் ஒரு மணிநேர சாவகாசமும் ஆறு மணிநேரத்திற்கு மேல் வேலை செய்பவர்களுக்கு இடையில் அரைமணி நேர சாவகாசமும் கொடுக்க வேண்டும்.

12 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது. அதற்கு மேல் 17 வயதுக்குட் பட்டவர்களையும் காலை 6 மணிக்கு முன்னேனும் மாலை 7 மணிக்குப் பின்னேனும் வேலை வாங்கக் கூடாது. வாரத்தில் 42 மணி நேரத்திற்கு மேலேனும் ஒரு நாளில் 8 மணி நேரத்திற்கு மேலேனும் அவர்களை வேலை வாங்கக் கூடாது. மற்றப்படி, முதியோர்களுக்குள்ள சௌகரியங்கள் இவர்களுக்கும் உண்டு.

எந்த வேலைக்காரருக்கும் வாரத்தில் ஒரு நாள் விடுமுறையாக இருக்கவேண்டும்.

இவற்றின் போக்கை யனுசரித்து, இரவிலேயே நடைபெறும், இரவும் பகலுமாய் நடைபெறும் தொழிற்சாலைகளுக்கும் நாடகப் படக்காட்சிக் கொட்டகைகளுக்கும் சில பொறுப்பான வேலைக் காரர்கள் சம்பந்தமாகவும் சில சில விலக்குகளும் மாறுதல்களும் செய்யப் பட்டிருக்கின்றன.

இந்த விதிகள் தலதாபன அதிகாரிகளால் கண்காணிக்கப் படும். இந்த விதியை மீறுபவர்கள் முதல் தடவை ரூ 25ம் பின் ரூ 250 வரைக்கும் அபராதத்திற் குள்ளாவார்கள். கண்காணிப்பவர்களின் வேலைக்குத் தடை செய்கிறவர்கள் ரூ 250 வரை முதல் தடவையிலும் அபராதத்திற் குள்ளாவார்கள்.

Bombay Information.

ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள்.

1. சைதாப் பேட்டைத் தாலுகா கோவில் படுகை மேக்காட்டில் (Reserved Forest) தயாளபாக் (Dayalbag) குடியேற்றம் மாதிரியான குடியேற்றம் (Colony) ஒன்று அமைக்க 352 ஏக்கர் நிலம் பிரித்தெடுக்கப் பட்டிருக்கிறது.
அக்டோபர் மாதவேலை.

Press Communique No. 91.

2. மேட்டூர் மின்சாரச் சாலையிலிருந்து வாலாசாப் பேட்டைத் தாலுகா தலங்கை வாங்கூர் ஒழுகூர் கிராமங்களுக்கும், அரக்கோணந் தாலுகா கணபதி புரம் சித்தூர் புன்னைவரம் கிராமங்களுக்கும், நாமக்கல் தாலுகா நள்ளிப் பாளையங் கிராமத்திற்கும், பாபநாசம் மின்சாரச் சாலையிலிருந்து அரிய நாயகபுரம் இலஞ்சி கிராமங்களுக்கும் மின்சார சத்தி யனுப்பப் படுகிறது.
அக்டோபர் மாதவேலை.

Press Communique No. 91.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்.

1. 'பிரதம நாணய சங்கங்களில் இறந்துபோன உறுப்பினர்களின் வாரிசுதார்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்டவர்களிடமிருந்து பிரவேசக் கட்டணம் வசூலிக்கவேண்டியதில்லை' என மாகாணப்பதிவாளர் அபிப்பிராயப்படுவதால், எல்லாச் சங்கங்களும் அடியில் கண்டபடி இனி மாதிரி விதி நிர். 7ஐத்திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும்.

பைலா நெ. 7 (திருத்தப்பட வேண்டியபடி.)

ஒவ்வொரு உறுப்பினரும்............... ரூபா............க்கு மேற்படக்கூடாது. தவிர இறந்துபோன உறுப்பினர்களின் பங்குகளும் நியமனம் மூலமோ அல்லது பரம்பரைப் பாத்தியம் மூலமோ பாத்தியம் கோருபவர்களிடமிருந்து பிரவேசக் கட்டணம் எதுவும் வசூலிக்கக் கூடாது. கூட்டுறவு.

2. அங்கத்தினர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையையும் கடன் தவணைத் தொகையையும் தங்கள் சம்பளத்திலிருந்து பிடித்துச் செலுத்திவிடச் சம்மதம் (agreement) கொடுத்தாலன்றிப் பொதுசன ஊழியர் கூட்டுறவுச் சங்கங்களில் (Public Servants' Co-operative Societies) அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படமாட்டாதென்றும் அவர்களுக்குச் சம்பளம் பட்டுவாடா செய்கிறவர்கள், அதன்படி சம்பளத்திலிருந்து பிடித்துச்சங்கத்துக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.
அக்டோபர் வேலை.

Press Communique No. 91.

3. சிறைக்கூட இலாகாவிலிருந்து கிடைக்காத துணிமணிகளுக்குச் சென்னை மாகாணக்

கைத்தறி நெசவுகாரர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வாங்கி வரும்படியாக அரசாங்க இலாகாக்களுக்குக் கற்பனை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நிபந்தனைகளுக்குட்பட்டு, சென்னை அரசாங்க அச்சுக்கூடம், புத்தகங்கள் கட்ட (Binding) இரண்டுவகைத் துணிகள் மாகாண நெசவுகாரர் சங்கத்தைக் கொடுக்கும்படியாகச் சொல்லியிருக்கிறது.

அக்டோபர் வேலை.

Press Communique No 91.

4. உடைக்கப்பட்ட சங்கங்களின் மிச்சத்தைச் சென்னை கவர்னர் சண்டை நிதிக்குக் கொடுக்கலாம்.

அக்டோபர் வேலை.

Press Communique No. 91.

5. தஞ்சை ஜில்லா நாட்டாண்மைக் கழகம் தன் ஆளுகையிலுள்ள 24 உயர்தரப் பையன்கள் பள்ளியில் தேனீ வளர்க்கவும் பட்டுக்கோட்டை உயர்தரப் பெண்கள் பள்ளியில் ஊறுகாய் போடவும் முரப்பாச் செய்யவும் கற்றுக்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறது. 96 தேனீக் கூடுகள் வாங்க ரூ 480ம் கண்ணுடிச் சாடிகள் வாங்க ரூ 200ம் ஊறுகாய் போட முரப்பாச் செய்யச் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியருக்கு ஊதியமாக ரூ 100ம் அனுமதித்திருக்கிறது.

Mail. (5—12—40)

6. ஆரம்பக் கல்விச் சட்டத்தின்படி, ஒவ்வொரு மாணவ மாணவியின் விருத்தியைப் பற்றிய ஆதரவு (Record Sheet) ஒவ்வொரு தலைமை ஆசிரியரும் வைத்து வரவேண்டுமென்றும் அவர்கள் வேறு பள்ளிக்கூடம் போகும் பொழுது அதை அங்கே ஆசர் செய்வதற்குக் கொடுத்தனுப்ப வேண்டுமென்றும் அப்படிக் கொடுத்தனுப்பப்படும் ஆதரவில் கண்டிருக்கும் விபரங்களை அதற்கென வைத்திருக்கும் குறிப்பில் (Register) கொடுத்தனுப்பும் தலைமை யாசிரியர் பதிந்து கொள்ள வேண்டுமென்றும் ஆரம்பக் கல்வி விதிகள் திருத்தப் பட்டிருக்கின்றன.

Fort. St. George Gazette.

ஈ. கூட்டச் செய்திகள்

இந்தக் கழகம் நெல் அரிசி விற்பனைக்காக வேண்டிய ஏற்பாடு செய்தல், நிலக்கடலையை உடைத்து எண்ணெய் எடுத்தலை அதிகப்படுத்தல், நெல்லையும் அரிசியையும் உள் நாட்டு வியாபாரத்திலும் ஏற்றுமதியிலும் நிறைப்படியே வாங்க விற்கத் திட்டஞ் செய்தல், விபசாயவிளைபொருள்களைத் தரம் பிரித்தல், கூட்டுறவு விலாசப்பட்டி (Directory) தயாரித்தல், கைத்தொழில் வியாபாரத் தலைவர் (Director of Industries and Commerce) வெளியிட்டு வரும் வாராந்தர விலைப் பட்டியைப் பெரிதாக்கல் முதலிய பல காரியங்களைப் பற்றிப் பேசி முடித்தது.

இந்தக் கழகம் சில முக்கியமான விளைச்சல் (Production) சந்தை (Market) மத்திய

தலங்களில், சீக்கிரம் எண்ணெய் பிழிந்தெடுக்கும் ஆலைகள் அரசாங்க உதவியுடன் ஏற்படுத்த வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது. நெல்லும் அரிசியும் நிறைப் படிக்கு விற்கப்படவேண்டுமென்றும் ஏற்றுமதி சரக்குகளெல்லாம் ஒரே மாதிரியாயிருக்க வேண்டுமென்றும் திட்டஞ்செய்யச் சிபார்சுசெய்திருக்கிறது. என்னென்ன இடங்களில் என்னென்ன தரமான அரிசி தேவையிருக்கிறதென்பதையும், அதைப் பக்கங்களில் நெல் விளையும் பிரதேசங்களிலேயே சாகுபடி செய்யச் சொல்லுவதின் மூலம் சரிப்படுத்தி விடலாமாவென்பதையும் விசாரணை செய்யவும் யோசனை சொல்லி யிருக்கிறது. நெல்லூர் தஞ்சாவூர் ஜில்லாக்களில் அரிசியும், கொடூரில் ஆரஞ்சுப் பழமும், சிற்றூரில் மாம்பழமும் தரம் பிரிக்கப்

பட்டு வருகின்றன. அரிசி, மாம்பழம், ஆரஞ்சுப்பழம், முந்திரிப் பழம், கருப்புக் கட்டி, பதனிட்ட தோல், பதனிடாத தோல் இவற்றைத் தரம் பிரிக்கப் புதிய இடங்களும் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றன. தஞ்சாவூர், கும்பகோணம் வியாபாரச் சங்கங்கள் (Marketing Societies) வேலை செய்யத் துவக்கும் காலத்திலிருந்து அங்கும் அரிசி தரம் பிரிக்கப்படும். தரம் பிரிக்கும் வேலைக் காரர்கள் விபசாய இலாகாவின் கீழாக வேலை பார்க்கிறவர்களாக இருந்து வரவேண்டு மென்றும் சிபார்சு செய்திருக்கிறது. இப் பொழுதுள்ள மாகாண வியாபாரக் கூட்டுறவுச் சங்கம் (Provincial Marketing Society) பழ விற்பனையில் மட்டும் பிரயோசனமான வேலை செய்து வருகிறது. மற்ற விளை பொருள்களுக்கு விற்பனைச் சங்கங்கள் தனியாக இருக்கவேண்டு மென்றும் பின்னால் அவற்றின் மத்திய சங்கங்களின் (Federations) மூலமாகவும் விற்பனையை விருத்தி செய்து கொள்ளலா மென்றும் சிபார்சு செய்திருக்கிறது.

The Director of Agriculture, Madras

---

12 அறிவுரைத் திரட்டு:

அ. விபசாய வியாபார கைத்தொழிற் குறிப்புக்கள்.

சுண்ணும்பைப் பல வேறுதரமான நிலங்களில் சேர்ப்பதினால் விளையும் மாறுதல்கள் பௌதிகமாகவும் இரசாயனமாகவும் சீவாதாரமாகவும் பல வேறுவகைப்படுகின்றன. பௌதிகமாக, இதன் வேலை மண் வயணத்தையே மாற்றுகிறது. கனத்த மண் கண்டத்தில் களி மண்ணைப் பின்னும் அதிக நுண்ணிய துகள்களாக மாற்றுவதில், இதன் வேலை நிரம்ப வெளிப்படையாகவும் தெரிகிறது. கனத்த மண் கண்டமும் இதனால் ஈரத்தை அதிகமாக அடக்கிவைக்கும் சத்தியை இழக்கிறது; அதிகக் காற்றோட்டம் பொருந்தியதாகவும் முன்னிலும் சூடேறியதாகவும் மாறுகிறது; அதி முன்னதாகச் சாகுபடிக்கும் இலாயக்காகிறது; உணரும்போது அதிகமாகவும் நொருங்கக் கூடியதாகிறது. இலேசான மணற்றரைகளில், இதன் வேலை கனத்த களி மண் தரைகளில் நடப்பதற்கும் மாருக இருக்கிறது. உதிரியாகவுள்ள மணலை ஒன்று சேர்க்கிறது; தரையைக் கட்டிப்படுத்தி ஈரத்தைக் காக்கக்கூடிய தாக்குகிறது. இரசாயனமாக, தரையிலுள்ள புளிப்பை (acidity) மாற்றுவதே அதன் முக்கிய வேலையாக இருக்கிறது. நுரைக்கும் தரைகளில் (sour soils), பயிர்களுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய அளவிற்கு, காடி (acid) விரவியிருக்கிறது; அப்படித் தரைகள் இதைச் சேர்ப்பதினால் இனிப்பாகின்றன. கரிமமில்லா (inorganic) செடி உணவு மண்ணோடு கலந்திருப்பதைப் பிரிக்கவும் இது சத்தியுள்ளதாயிருக்கிறது. அப்படிப் பிரிக்கப்படும் பொழுது, செடிகளுக்கும் அது எளிதில் கிடைக்கிறது. ஒரு நிலத்தின் வளம், அந்த நிலத்திலுள்ள சத்தின் அளவைப் பொறுத்ததல்ல; செடிகளுக்கு உதவக்கூடியதான சத்து அதில் எவ்வளவாக இருக்கிறதோ, அதைப் பொறுத்ததாகவே யிருக்கிறது. பாதகமான அல்லது விரும்புவதற்கில்லாத சிறு பூச்சியினங்களை ஒழிக்கவும் பிரயோசனமானவற்றை விருத்தி செய்யவும் இது உதவுகிறது. கரிமப் பொருள்கள் (organic substances) காலகைகளாக (Nitrates) மாறுவதற்கான வேலை, சில மண் ணுண்ணங்களால் (Soil Bacteria) செய்யப்படுகிறது; இந்த நுண்ணங்கள், தரையில் காடி அதிகமாயிருந்தால், தங்கள் வேலையைச் செய்யக்கூடியதில்லை; செடியின் வாழ்க்கையும் நிலத்திலுள்ள காடி

யின் அளவைப்பொறுத்ததாகவே யிருக்கிறது. சுக்கங்கீரை (Sorrel) போன்ற செடிகள் காடித் தரைகளில் விருத்தியாக உண்டாகின்றன; பயற்றஞ் செடிகளுக்குச் சுண்ணும்பு அதிகமா யுள்ள தரையாக இருக்க வேண்டும்.

Tasmania Journal of Agriculture.

2. நடுகிற நிலம் ஒரே மாதிரியாக இருக்க, அதிக உரமிட்ட நாற்றங்காலின் நாறுகள், உரம் குறைவாக இட்ட நாற்றங்காலின் நாறுகளைக் காட்டிலும் அதிக மேனியே காண்கின்றன. (குழந்தைகளுக்கும் கருப்பத்திலிருந்து பதினெரு வயது வரையேனும் நல்ல ஊட்டம் கொடுக்கவேண்டு மென்று இதே காரணமாகச் சொல்லப்படுகிறது. பின் வயதின் ஊட்டக்குறைவை யேனும் அதிக ஊட்டத்தால் ஒருவாறு தேற்ற முடியும். அதி பாலியத்தின் ஊட்டக் குறைவை, பின் எவ்வகையிலும் தேற்றவேமுடியாது போகும். ப-ர்)

விபசாய இலாகா அறிக்கை 38-39

ஆ. கிராமப் புனருத்தாரண தேச முன்னேற்றக் குறிப்புக்கள்.

1. கிராமவாசிகள் தங்கள் சுய நம்பிக்கையையே இழந்திருக்கின்றனர்; அவர்கள் வறுமையால் சோர்ந்துபோய் உற்சாகமுமில்லாதிருக்கின்றனர். அவர்களின் சோர்வை நீக்காதவரை, அவர்கள் உழைப்பினுல் விளையக்கூடிய பயனையும் அவர்கள் உணர முடியாது. ஆகையால், முதல் முதலாக அவர்கள் சோர்வு நீக்கப்படவேண்டும். அதற்கும் பின்னதாகவே, விருத்திக்கான வேலைகள் பலிதமாகக் கூடும். அவர்கள் சென்ற சில வருடங்களாக, அடுத்தவர்கள் உதவியை எதிர்பார்த்தே வாழ்ந்து வந்திருப்பதால், தாங்களாக எதையும் செய்துகொள்ள விளக்கமில்லாமலுமிருக்கின்றனர். அரசாங்கத்திற்கும் தல தாபனங்களுக்கும் வரவு இன்ன வகையில் தான் வருகிறதென்றும் இவ்வளவுதான் வருகிறதென்றும் அதற்கின்னின்ன செலவு இவ்வளவிருக்கிறதென்றும் அவைகளின்னின்ன வகையில் இவ்வளவுதான் தங்களுக்கு உதவக்கூடுமென்றும் அவர்கள் தெரியவேண்டும். அப்பொழுதுதான் தாங்கள் செய்யக்கூடியவற்றைத் தாங்கள் செய்யாதவரை, தாங்களெதொரு நன்மையையும் அவற்றிலிருந்து அடையமுடியாதென்பதையும் உணர்வார்கள். கிராமக் கட்டுகள் உலைந்து வருவதையும் தடுக்கவேண்டும். தாங்களாகவே ஒரு சேரப் பொது நன்மையான வேலைகளைச் செய்து முடிக்கவும் தூண்டவேண்டும். தேக திடமுள்ள ஆணும் பெண்ணும் தங்களாலியன்ற வேலைகளை ஊர்ப் பொது நன்மைக்காகச் செய்ய முன் வரவேண்டும். உழைப்பில், முன் காலம்போல், பெருமையும் கொள்ளவேண்டும்; அதுவும் ஊர்ப் பொது நன்மைக்காக உழைப்பதைப் பெருங் கௌரவமாகக் கொள்ள வேண்டும். குடியரசின் பொதுத் தாபனங்களின் நன்மையெல்லாம் குடியானவர்கள் வாக்குக் கொடுப்பதைப் பொறுத்தே யிருக்கிறது; அவர்கள் தங்கள் நன்மையைத் தேடுகிறவர்களுக்கே வாக்குத் தரவேண்டும். அப்படிக்கில்லாது, பணத்துக்காக வேனும் பிறர் சொல்லுக்காக வேனும் வாக்குக் கொடுப்பதாயிருந்தால், அப்படி வாக்குப் பெற்றவர்கள் தங்கள் நன்மையைத் தேடக்கூடியதுமில்லை; தங்களுக்குச் சிபார்சு செய்த பெரியோர்கள் நன்மையை அவர்கள் தேடுவதால், தங்களுக்கே பெரும் பாதகமும் விளையலாம். இவற்றைக் கிராமவாசிகள் அறியவேண்டியதவசியம்.

வருடத்தில் ஒரு வாரம் கிராமாபிவிருத்தி வாரமாகக் கொண்டாடவேண்டும். முதல் நான்கு நாட்களும் கிராமச்சாலை கிராமப் பொதுவிடம் இன்னும் இவைபோன்ற நிரந்தரமானவற்றைச் செம்மைப் படுத்தவேண்டும். ஐந்தாம் நாளைச் சுத்தம் செய் நாளாகக்

கொண்டாடவேண்டும். ஒவ்வொருவரும் தன் தன் வீட்டை முற்றத்தை கொல்லையை அக்கம் பக்கத்தைச் சுத்தம் செய்யவேண்டும்; பின் தன் தன் தெருக்களேயும் பொதுவிடங்களேயும் சுத்தஞ் செய்யவேண்டும். ஆரும் நாளே மரஞ் செடி கொடி நடும் நாளாகக் கொண்டாடலாம். ஆனல், ஏப்பிரல் மாதம் இதற்கேற்ற காலமில்லையாதலால், ஒவ்வொரு வருடமும் ஆகஸ்டு மாதம் முதல் தெய்தியை மரஞ் செடி கொடி நடும் நாளாகக் கொண்டாடுவதென்றும் ஆதலால் இந்த வார ஆரும் நாளேக் கூட்டுறவுநாளாகக் கொண்டாடுவதென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நாளில் கூட்டுறவு வேலையைப் பற்றிப் பிரசாரஞ் செய்யவும், பல நோக்கச் சங்கமில்லாத இடத்தில் அதை யேற்படுத்தவும், இருக்குமிடத்தில் அதன் வேலையைப் பலப்படுத்தவும், வேறு வகைச் சங்கங்கள் ஏற்படுத்தவும், குடிசைத் தொழில்களில் ஈடுபடச் செய்யவும் வேண்டும். அதற்கான பிரசாரமும் உதவியும் செய்ய வேண்டும். ஏழாம் நாள் ஒரு முக்கிய நாளான திருநாளாகக் கொண்டாடப்படவேண்டும்; அன்றையப் பொழுதை, எல்லாரும் உல்லாசமாக மகிழ்ச்சியுடன் ஆடிப் பாடிக் கழிக்கவேண்டும்; தன் தன் நிலைமையையும் குறைகளேயும் ஆராய்ந்து தன்னைத் திருத்துவதற்காக விருத்தி செய்துகொள்வதற்கான காரியங்களின்னதெனவும் திட்டஞ் செய்து அவற்றை அன்றுமுதல் கடைப்பிடித்தும் வரவேண்டும். இவையே சூரத் சில்லாக் கழகத்தின் 1939-1940 வருடத்திய கிராமாபிவிருத்தி வாரக் கொண்டாட்டத் திட்டம்.

Rural India.

2. அரசாங்கம் தன் செலவிற்காகப் பாங்கு முறிகள் (Bank Notes) வெளியிடுவதாலும் வேறு வகையாகப் புள்ளிகளுக்குச் செல்லவேண்டியதைக் கழிப்பதாலும் நாணய வோட்டத்தை விம்மச் (Inflate) செய்யலாம். பயனே பயன்படு பொருள்களோ (Ultilities) அதிகப்படாமல், இவ்விதமாக நாட்டின் செலவழிக்கும் சத்தி மட்டும் அதிகப்படுத்தப் படுமாயின் விலை வாசி உயர நேரும். விலை வாசி உயரவே, தேவைப் பொருள்கள் முன்போல் செலவாகா. யுத்தத்தால் தேவைப் பொருள்கள் குறைய, அதனல் விலையேறுவதையேனும் யுத்த காரணமெனச் சகிக்கக்கூடும்; மற்றப்படி விலையேறுவதால்; தேவைப் பொருள்களைப் பெற முடியாது போகிறவர்கள், அரசாங்கத்தின் நேர்மையில்லா முறையே காரணமெனத் தெரியும்போது, அதைப் பழிக்கவும் பின் வாங்கார்.

Mysore Economic Journal.

3. பொருளாதார முன்னேற்றத்திற்காக என்ன ஏற்பாடு செய்வதானலும் அது முன்னடியே வகுக்கப்பட்ட ஒரு பெரிய திட்டத்தின் கீழ் நடைபெறவேண்டும். அவ்விதத் திட்டத்தை அமைத்து நடத்துகிறவர்களுக்குப் போதிய அனுபவமும் முன்யோசனையும் வேண்டும். அந்தந்தப் பிரதேசங்களின் தேவைகளுக்கு உகந்ததான திட்டமே அமுலுக்கு வரவேண்டும். அபிவிருத்தி இலாகாக்களைச் சேர்ந்த அதிகாரிகளும் கூட்டுறவாளர்களும் கலந்தே திட்டஞ் செய்யவேண்டும். அப்படித் திட்டம் போடுவதற்கு முன் வியாபார நிலவர சாதக பாதகங்கள் குடியானவர்களின் தேவைகள் முதலியவற்றையும் புள்ளி விவரங்களேயும் ஆற அமர யோசித்துப் போடவேண்டும்.

அதிகாரப் பற்றுள்ளவர்கள் என்றும் அதிகாரப்பற்றில்லாதவர்கள் என்றும் பாகுபாடு செய்து, இந்த வித்தியாசத்தை ஒரு சார்பார் அடிக்கடி மிகைப்படுத்திக் கூறுகின்றனர். இந்த மனப்பான்மை மாறவேண்டும். அதிகார வர்க்கத்தினர்களுக்கும் பிறருக்கும் ஏதோ முரண்பாடு இருந்து வருவதாகச் சிலர் நினைப்பதை நான் அங்கீகரிக்கவில்லை. அபிவிருத்தி இலாகாத்தலைவர்களும் பொது ஜனத்தலைவர்களும் ஒருமுகமாக நம்மிந்திய விவசாயிகளின் கட்ட நட்டத்தைக் குறைப்பதில் கருத்துள்ளவர்களாயிருக்கிருர்கள். (எல்லா அதி

காரிகளைப் பற்றியும் அப்படிச் சொல்லுவ தற்கில்லை. ப-ர்.) நான் இவ்வளவு வருடகாலம் பொது நல சேவைசெய்வதிலிருந்து எனக்குக் கிடைத்த அனுபவங்களை ஒன்று சேர்த்துக் கவனிக்கும் போது எனக்கும் இலாகா அதிகாரிகளுக்கும் முரண்பாடு ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் ஒன்றுகூட எனது ஞாபகத்தில் இல்லை. (என் சொந்த அனுபவத்தில் கூட ஓரே ஒருதடவை மனவேற்றுமை யேற்பட்டது. கூட்டுறவு மலர். 12 இதழ் 7 பக்கம் 120) அதிகாரிகளும் சனத் தலைவர்களும் சமரசமாகச் சந்தித்து அவரவர் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

சென்ற சுமார் 25 வருடங்களுக்கு முன், நம் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தைத் தியாக புத்தியுடன் ஆரம்பித்து நடத்திய பல கூட்டுறவாளர்கள் முன்னணியில் வேலை செய்திருக்கிறார்கள். அவர்களுக்குச் சமானமானவர்கள் இக்காலத்தில் கூட்டுறவு இயக்கத்தில் இன்னும் வந்து சேரவில்லை. ஆரம்பத்தில் அவர்களுக்கிருக்கக் கூடிய ஊக்கம் நாளுக்கு நாள் குறைந்துவிடுகிறது. கௌரவ ஊழியம் செய்வதில் நேர்முகமாக ஆதாயம் கிடைக்கவில்லை யென்று, கூட்டுறவுத் தாபனங்களின் மூலம் மறைமுகமாக ஒரு சிலர் பணம் சம்பாதிக்கப்பார்க்கிறார்கள். ஆரம்ப காலத்தில் கௌரவ ஊழியர்கள் காட்டுகிற ஊக்கம் அனேகமாக நீடிப்பதில்லை. மேலும் கௌரவ ஊழியர்களை முற்றிலும் எதிர்பார்த்து நம்மியக்கத்தை இனி நடத்துவது சாத்தியமுமில்லை. கூட்டுறவுத் தாபனங்களின் எண்ணிக்கையும் வேலைப்பாடுகளும் அதிகரித்து வருகிற இக்காலத்தில் நூற்றுக்கணக்கான கௌரவ ஊழியர்கள் கிடைப்பதென்றாலும் போதாது. ஒவ்வொரு பிரதம கூட்டுறவுச் சங்கத்தையும் கிராமங்களில் நிர்வகிப்பவர்கள் எப்போதும் போலவே கௌரவ உத்தியோகத்தர்களாகத்தான் இருக்கவேண்டும். 4, 5 கிராமச் சங்கங்களை ஒன்றுசேர்த்து அவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஊக்கமும் பயிற்சியும் உள்ள கிராம வழிகாட்டி (Rural Guide) ஒருவரிடம் ஒப்படைக்கவேண்டும். இவ்விதக் கிராம வழிகாட்டி வேலையை ஏற்றுக்கொள்ள முன்வருகிற படித்த வாலிபர்கள் அவரவருக்குக் கிடைக்கும் மாதச் சம்பளத்தைப் பொருட்படுத்தாமல் பொது நலத்தையே பெரிதாகக் கருத வேண்டும். சிறந்த பாதிரிகளாகப் பத்தி சிரத்தையுடன் சேவை செய்ய அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஆற அமர யோசித்து அனுபவசாலிகள் அமைத்துக்கொடுக்கிற திட்டத்தைப் பயிற்சி பெற்ற வழிகாட்டிகள் நடத்துவதென்றால், கூட்டுறவு இயக்கத்திலிருந்து ஏழை மக்கள் பலவித நன்மைகளை அடையக் கூடும். அழகாகப் பிரசங்கம் செய்வதில் மட்டும் மதராசிகள் கெட்டிக்காரர் என்கிற கருத்து வடநாட்டில் பரவி வருகிறது. ஆடம்பரமான பேச்சுக்கள் கூடாது. உருவகமான பொது நல வேலைகளைத் தொடர்ந்தும் செய்து காட்டவேண்டும்.

அ. இராமலிங்கஞ்செட்டியார்.

4. பிறர் மதிப்புக்குரியவர்களாக விரும்புவோர், தாங்கள் அவர்களுக்கு ஏதேனும் கொடுக்கக் கூடியவர்களா யிருக்க வேண்டும். கொடுப்பது வெறும் பணமாகவே யிருக்க வேண்டுமென்ற அவசிய மில்லை. பணத்தை விட உயர்ந்த பொருள்களும் ஒருவர் மற்றொருவருக்குக் கொடுக்கலாம். பௌதிகம், இரசாயனம் முதலிய சாத்திர ஞானத்தைக் கொடுக்கலாம். அதைவிட உயர்ந்ததும், என்றும் மாறா இன்பத்தை அளிக்கக் கூடியதுமான ஆத்மீக ஞானத்தையும் அளிக்கலாம். இதைக் கொடுப்பவர்களுக்குத்தான் என்றும் குன்றாப் புகழும் பெருமையு முண்டு. சரித்திரமே இதற்குச் சான்று. ஆதலால், நம் நாடும் நம நாட்டு மக்களும் வாழ உலகத்திற்குக் கொடுக்கக் கூடிய செய்தியும் ஞானமும், நம்மிடத்திலிருக்கவேண்டும்.

ஆத்மீக வாழ்வு, துறவு தொண்டு முதலியவற்றின் மூலமாகவே எல்லை யற்ற

பலத்தை நம் நாடு பெறமுடியுமென்பது சுவாமி விவேகானந்தரின் நம்பிக்கை. இத்தகைய உயர் வாழ்விலும் தியாகம், சேவை முதலிய இலட்சியங்களிலும் நம் மக்களை வளர்க்கக் கூடிய கல்வியே தேசியக் கல்வியாகும்.

அ. சிதம்பரநாத செட்டியார்.

இ. இலக்கிய இலக்கண அருங்கலைக் கல்வி யாராய்ச்சிக் குறிப்புக்கள்.

1. நான் ஒன்பது முதல் பன்னிரண்டு வயதளவும் தெலுங்கு கற்றேன். தெலுங்கு பேசவும் வசன நூல்களைப் படிக்கவும் எழுதவும் தேர்ச்சி பெற்றிருந்தேன். தமிழ் நாட்டுக்கடுத்துத் தெலுங்க நாடிருந்தும் தமிழ் நாட்டிலேயே இங்குமங்கும் தெலுங்கர் சிலர் குடியிருந்தும் தெலுங்கை எழுத்துக்களும் தெரியாதபடி முற்றும் மறந்துவிட்டேன். எழுபது வருடமாகப் பயன்படாமற் போன தெலுங்கைப் படித்த காலத்தைத் தமிழ்ப் படிப்பிலாவது அங்கிலப் படிப்பிலாவது செலவிட்டிருந்தால் உபயோகமாக இருந்திருக்குமே என்று சில சமயங்களில் எண்ணி வருத்தமடைந்திருக்கிறேன்.

(செந்தமிழ்.) வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

2. சொல்வன்மை என்பது என்னை? கற்கவேண்டும் நூல்கள் பலவற்றைவும் கசடறக் கற்றுணர்ந்தோர் தாம் உணர்ந்த அரிய பொருள்களைக் கேட்போர் மனங்கொள்ளுமாறு எளியவாகச் சொல்லுதல்; சிறந்த பயனுள்ளவற்றைச் சுருக்கமும் விளக்கமும் இனிமையும் பொருந்த வழுவில்லவாகச் சொல்லுதல்; பருவம் நிலை கல்வி ஒழுக்கம் செல்வம் முதலிய வற்றால் தமக்கும் கேட்போர்க்கும் உளவாய தகுதி வேறுபாடுகளை அறிந்து அவற்றிற் கேற்பச் சொல்லுதல்; முன் சொல்வனவும் பின் சொல்வனவும் அறிந்து நிரல் படக்கோத்துச் சொல்லுதல்; கூறும் பொருளுக்கேற்ப எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேறுபாடமையவும், மெய்ப்பாடு தோன்றவும் சொல்லுதல்; நிமிர்ந்த நிலையும் மலர்ந்த முகமும் தெளிர்ந்த குரலும் உடையராய்த் தடுமாற்றமின்றிச் சொல்லுதல் என்றின்னோரன்ன பண்புகளின் தொகுதியே சொல்வன்மை எனப்படும். இவ்வாறு சொல்லின், உலகினர் அதனைப் பின்னும் கேட்க விரும்புவர்; விரும்பி ஏற்றுக்கொள்வர்; ஏற்று அவ்வழி ஒழுகுவர். இவற்றால் சொல் வன்மையுடையாருக்கு உலகம் வயமாதல் பெற்றும். ஆகவே, சொல் வன்மையானது ஒரு வளவிய செல்வமாமென்பது தேறப்படும்.

(தமிழ்ப் பொழில்.)

ஆசிரியர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

ஈ. சிறந்த வாசகங்கள், செய்யுள்கள், அறவுரைகள், பழமொழிகள்.

1. பிறரும், தம்மைப் போலவே நல்லவர்கள் புத்திசாலிகள் தங்களுக்கென ஒரு அபிப்பிராயமும் முடிவும் கொள்ளக்கூடியவர்கள் பிரியம் வைக்கக்கூடியவர்கள் செயலாற்றக்கூடியவர்க ளென்றும், அப்படிப் பலரில் தானொருவனே யென்றும் ஒரு முடிவிற்கு— பிறரெவரையும் அத்தகைய முடிவிற்கு வரவொட்டாது குருடாக்கப்பட்டிருக்கும் அந்த முடிவிற்கு— எவனொருவன் வருகிறானோ, அவன் மனிதர்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவனாவான்; அவனைப் புத்திசாலித்தனத்தையும் ஒழுக்கத்தையும் அடக்கியாளுவதற்கான

மார்க்கத்தில் — முன்னேறிச் செல்லும் வழியில் வெகு தூரம் சென்று விட்டானென்றே சொல்ல வேண்டும்.

நாம் தனி மனிதர்கள்பற்றி இவ்வாறுகக் கருதக் கூடுமென்றால், இங்கேதான் சகிப்புத் தொடங்குகிறது; நாமிப்படியே வெகு தூரஞ் சென்று சமய பேதங்களையும் சமூக வித்யாசங்களையும் அரசியல் பிளவுகளையும் கருதத் தொடங்க வேண்டும். உங்களுடைய எதிரிகள்—உங்களுக்கு எதிரிகளாக இருக்கிற காரணத்தினாலேயே—முட்டாள்களுமல்ல, போக்கிலிகளுமல்ல. உங்களோடு இணங்கிப் போகாததினாலேயே, அவர்கள் அயோக்கியர்களாய் விடவும் மாட்டார்கள். நம்முடைய அபிப்பிராயம் போன்ற அபிப்பிராயமே கொள்ளாதவர்களை யெல்லாம் புத்திசாலிகளல்ல வென்று நாம் நினைக்கிறதாக ஒரு ஞானி சொன்னார். உங்களுடைய அரசியல் கொள்கைக்கு மாறுபட்ட கொள்கைக்காரரும் உங்களைப் போலவே உண்மையாக, உங்களுக்குஞ் சமானமாகவே மாகாணத்தின் நாட்டின் நல்வாழ்வைத் தேடுகிறவர்களென்றும் உங்களைப் போலவே தியாகஞ் செய்யவும் தயாராக இருக்கிறார்களென்றும் கருதவேண்டும். நம் நினைவுகளை இனிமைப்படுத்தும் அமிருத பானமொன்றுமே இல்லையா? அடுத்தவர்களின் கருத்தையும் அறிந்து அதற்கிணங்கிப் போகக்கூடியவனே சந்தோசம் பொங்கி வழியும் உபகார புருடனாவான். நம் கட்சிப் பிரிவுகளும் அவநம்பிக்கையுமே நம் நாட்டிற்காக வேண்டிய அநேக நல்ல காரியங்களையும் கெடுத்து நம் நாட்டையும் பலவீனப்படுத்தி வருகின்றன. Sri. Mirza Ismail.

2. உடம்பா ரழியி லுயிரா ரழிவார்;
திடம்படு மெய்ஞ் ஞானஞ் சேரவுமாட்டார்;
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே;
உடம்பை வளர்த்தே னுயிர் வளர்த்தேனே.

உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்;
உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்;
உடம்புளே யுத்தமன் கோயில் கொண்டானென்று,
உடம்பினை யானிருந் தோம்பு கின்றேனே.

திருமந்திரம்.

3. பழமொழிகள்:

1. களர்முறிக்க வேப்பந்தழை
2. விண்போய்த்தால் மண்போய்க்கும்.
3. சுவாதியில் வில்போட்டால் சொன்னபடி மழை.
4. குடத்திலே கோரடு போட்டால், கம்பிலே கழுதை மேயும்.
5. அடிவானம் கருக்கினால் அப்போதே மழை.
6. ஊர் நல்லதோ, வாய் நல்லதோ. (மதுரைக்கு வழி வாயிலே)
7. கடுகு போகிறது கணக்குப் பார்ப்பான், பூசணிக்காய் போகிறது தெரியாது.
8. எண்ணறியாதவர், கண்ணில்லாதவர்; எழுத்தறியாதவர், கருத்தில்லாதவர்.
9. எல்லாம் அறிந்தவருமில்லை; ஏதுமறியாதவருமில்லை.
10. எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.

4. அறிவுரைகள்:

1. பெரியோரை அடுத்தால் உயர்வும், சிறியோரை அடுத்தால் இழிவும் உண்டாகும்.
2. அறிஞருடைய பகையினும் மூடருடைய சினேகம் அதிகமாகத் துன்பஞ்செய்யும்.
3. நல்லோர் பகைவரிடத்தும் அன்பு பராட்டி அவராலும் சுகம் அடைவார்.
4. கற்றவருடைய பெருமையைக் கற்றவரே அறிவார்.
5. அறிவில்லாத பல புதல்வரைப் பெறுதலினும், அறிவுள்ள ஒரு புதல்வனைப் பெறுதலே நல்லது.
6. இளமையில் வருத்தப்பட்டுக் கற்றவர், பெருமையடைவார்; அப்படிக் கல்லாதவர் சிறுமையே யடைவார்.
7. தனையடிமை கொண்டவனே, தப்பாதுலசந்தனை யடிமைகொண்டவனுவான்.

நீதி வெண்டா.

சனவரி-பிப்ரவரி மீ பஞ்சாங்கம் உட்பக்கம் பார்க்க.

கால்நடைச் சந்தைகளும் விபசாயக் கண்காட்சிகளும்.

திரிசிராப்பள்ளி சில்லா திருவரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி உற்சவத்தின்போது விபசாயக் கண்காட்சி நடைபெறும். கோயன்புத்தூர் சில்லா கோபி செட்டி பாளையம் தாலுகா பாரியூரில் சனவரி மீ இரண்டாம் வாரத்தில் அம்மன் தேர் உற்சவத்தின் போது கால்நடைச் சந்தை நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயம் ஈரோடிலிருந்து 2 மைல். சேலம் சில்லா திருச்செங்கோடு தாலுகா காலிபட்டியில் சனவரி மீ இரண்டாம் வாரத்திலிருந்து இரதோற்சவ நாள் உள்பட 10 நாட்கள் விபசாயக் கண்காட்சியும் கால்நடைச் சந்தையும் நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயம் காலிபட்டிச் சாலையிலிருந்து 6 மைல். கோவில்பட்டி தாலுகா கழுகுமலையில் தைப்பூசம் ஒட்டி 15 நாட்கள் கால்நடைச் சந்தை நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயம் கோவில்பட்டியிலிருந்து 12 மைல்: நாலாட்டின் புத்தூரிலிருந்து 8 மைல். பொள்ளாச்சி தாலுகா வால்பாரையில் சனவரி மீ கால்நடைச் சந்தை நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயம் பொள்ளாச்சியிலிருந்து 40 மைல். ஓரக்கரட்டேரியில் சனவரி மீ 26௳ முதல் 31௳வரை கால்நடைச் சந்தையும் விபசாயக் கண்காட்சியும் நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயம் நாடாபுரம் சாலை. ஆனைமலையில் மாரியம்மன் உற்சவகாலத்தில் இரண்டு நாள் விபசாயக் கண்காட்சி நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயம் பொள்ளாச்சியிலிருந்து 10 மைல். பவானியில் செல்லந்தியம்மன் உற்சவத்தின் போது விபசாயக்கண்காட்சி நடைபெறும். சமீபத்திலுள்ள இருப்புப்பாதை நிலயம் ஈரோடிலிருந்து 9 மைல். திண்டிவனம் தாலுகா மைலத்தில் தைக் கார்த்திகை உற்சவத்தின் போது 3 நாட்கள் கால்நடைச் சந்தை நடைபெறும்.